விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 01 புதன்கிழமை (16.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

## உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பகுதிகளில் சமூகத் தொற்றை அறிய பிசிஆர் பரிசோதனைகள்

### வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
கொரோனா இரண்டாம் அலையில் வடக்கில் 58 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை யில் சமூகத் தொற்றாக மாறி யுள்ளதா என்பதை அறிய பிசிஆர் சோதனைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளது என வட மாகாண சுகா தார சேவைகள் பணிப் பாளர் வைத்தியர் 19

## யாழில் ஒரே நாளில் 19 பேருக்கு தொற்று

### மருதனார்மடம் கொத்தணி 58 ஆக அதிகாரிப்பு

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய 19 பேருக்கு நேற்று யாழில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து மருதனார்மடம் சந்தை கொத்தணி எண்ணிக்கை 58 ஆக உயர்வடைந்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் இந்துக் கல்லூரிக்கு பூட்டு

(வவுனியா)
வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட புளி யங்குளம் இந்துக் கல்லூரி இன்று புதன்கிழமை தொடக் கம் மறு அறிவித்தல் வரை மூடப்படு 19

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அலுவலகப் பணிகள் முடங்கின

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத் தொகுதிப் பணி யாளர்களை அலு வலகத்திற்கு வர 19

## கீரிமலை மடம் மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் கொத் தணியுடன் தொடர்புபட்டு கொரோனா தொற்று உறுதி யான ஒருவர் கீரிமலை மடம் சென்று திரும்பியமை கண் டறியப்பட்டதால் கீரிமலை தர்ப் பண மடம் மறு அறி வித்தல் வரும் 19

## நாட்டில் நேற்றும் +622 பேருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)
நாட்டில் நேற்றும் +622 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ள தாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 19

## யாழ்ப்பாணம் அளவெட்டி பிரதேச வைத்தியசாலை தனிமைப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)
அளவெட்டி பிரதேச வைத் தியசாலை தனிமைப்படுத்தப்பட் டுள்ளது.
யாழ்ப்பாணம் மரு தனார்மடத்தில் உரு 19

### 2021 மார்ச் மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்

## கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் தீர்மானம் மேற்கொள்ளப்படும்

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

(கொழும்பு)
2021 மார்ச் மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்துள்ள தாக தெரிவித்துள்ள அமைச்சர் கெஹலிய 19

## தமிழ் அரசியல் கைதிகள் என சிறைகளில் எவரும் இல்லை

### மீண்டும் உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் எவரும் தற் போது கிடையாது என அமைச் சரவை இணைப் பேச் சாளரும் அமைச்சரு 19

### கடந்த இரண்டு கிழமைகளுக்குள்

## மருதனார்மடம் சந்தைக்கு சென்றோர் தொடர்பு கொள்க

### சுகாதார பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
கடந்த இரண்டு கிழமை களுக்குள் மருதனார் மடம் பொதுச்சந்தைக்கு 19

### இரண்டாவது தடவையும்

## நல்லூர் பிரதேச சபையின் பட்ஜெட் தோற்கடிப்பு

### பதவி இழக்கிறார் தவிசாளர்

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபை 19

## வாகன இலக்க தகடுகளில் மாகாணத்தை குறிக்கும் எழுத்தை அகற்ற தீர்மானம்




09ஆம் பக்கம் பார்க்க

### எதிர்வரும் 23ஆம் திகதி

## பாடசாலைகளுக்கு 3ஆம் தவணை விடுமுறை

(கொழும்பு)
பாடசாலைகளுக்கு எதிர்வரும் 23ஆம் திகதி 3ஆம் தவணை விடுமுறை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சர் பேராசிரி யர் ஜி.எல்.பீரிஸ் மேற் படித் தகவலை அறி 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இரண்டாம் ஆண்டு
## நீங்காத நினைவலைகள்



பிறப்பு
1982.06.20

இறப்பு
2018.12.16

## அமரர் லோகதாசன் விஜிதசங்கர்

[ கணனி ஆசிரியர், NC TEC நிறுவன உரிமையாளர் ]

கள்ளமற்ற மனமும்
களங்கமற்ற அன்பும் கொண்டு
வாழ்ந்த நீங்கள்
நீள்துயில் கொண்டு
இரண்டு ஆண்டாகி விட்டது.
ஆறாத்துயரில் தவிக்கின்றோம்
ஆற்றத்தான் நீங்கள் இல்லை மண்ணில்...

(4898)

34, முத்துமாரி அம்மன் வீதி,
செல்வாநகர், கிளிநொச்சி.

தகவல்
லோகதாசன் குடும்பம்

# பகிரங்க ஏல அறிவித்தல் - 2021
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள். இறைச்சிக் கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2021.01.01 - 2021.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி. நேரம் :- 2020.12.23 காலை 10.00 மணி
பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :- கரைச்சி பிரதேச சபை. தலைமை அலுவலகம். கிளிநொச்சி.

**பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்**

| இல. | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இழிவுத் தொகை |
|---|---|---|
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 5,461,999.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை கருவாடு. முட்டை | 436,306.50 |
| 3 | கிளிநொச்சி பொது மலசலகூடம் | 113,623.56 |
| 4 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 226,256.49 |
| 5 | வட்டக்கச்சி சந்தை தொகுதி | 272,810.43 |
| 6 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக் கடை | 455,301.00 |
| 7 | இராமநாதபுரம் கோழி இறைச்சிக் கடை | 369,765.00 |
| 8 | இரணைமடு சந்தை தொகுதி | 49,985.10 |
| 9 | இரணைமடு கோழி இறைச்சிக் கடை | 444,163.50 |
| 10 | D10 உருத்திரபுரம் சந்தை தொகுதி | 22,719.69 |
| 11 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 376,215.84 |
| 12 | தருமபுரம் சந்தை தொகுதி | 80,625.78 |
| 13 | கண்டாவளை மாட்டிறைச்சிக் கடை | 45,488.79 |
| 14 | முரசுமோட்டை கோழி இறைச்சிக் கடை | 71,458.20 |

**நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2020.12.22 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
2. சித்தியடையும் ஏலகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்பு தொகை புரட்டாதி. ஐப்பசி. கார்த்திகை. மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.
3. 2020.11.21 ஆம் திகதி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளும் கருத்திற் கொள்ளப்படும்.

(C-919)

**தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

# மரண அறிவித்தல்

## கனகம்மா செல்வராசா

**பிறப்பு : 24.01.1956 இறப்பு : 15.12.2020**



பத்திரகாளி கோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா செல்வராசா நேற்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லர் - செல்வம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அரியகுட்டி - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும் செல்வராசாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற விஜயகுமார் (விசியன்) மற்றும் விஜிதா (மெரினா) ஆகியோரின் அன்புத் தாயாரும் DJ விஜயின் (விஜய் DJ சவுண்ட்ஸ் - உரிமையாளர்) பாசமிகு மாமியும் காலஞ்சென்ற மணி மற்றும் கணேஸ், காலஞ்சென்ற ராசா மற்றும் நவரத்தினம், காலஞ்சென்ற ராசாத்தி மற்றும் குழந்தை (சிவபாக்கியம்), வேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜிந்துஜா, Roy ஜினோ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பாஸ்கரன், கிளி, கரன், வசி, ரூபன், மலர், வாணி, கிருபா, காலஞ்சென்ற யோகா மற்றும் நகு, ஜீவா, விக்னா, மதீஸ், சித்தி (ஜேர்மன்), அப்பன், தங்கா, வனிதா, குட்டி (லண்டன்), பவிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவனேசன் (லண்டன்), நாதன், திருமகள், கேமா, மாலா, சுகந்தன் (பிரான்ஸ்), ரமா (பிரான்ஸ்), சசி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் உமா, மயூரன் (பிரான்ஸ்), கௌசன், சுரேன் (லண்டன்), ஆஷா, மித்தா, அஜித்தா, கஸ்மி ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் நடேஸ், பரமேஸ்வரன், தெய்வேந்திரம், இரத்தினம், மகேஸ் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2020) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4968, 4973)

பத்திரகாளி கோவிலடி,
தாவடி தெற்கு. கொக்குவில்.


தகவல்:
குடும்பத்தினர்



இந்திய இழுவைப்படகை கட்டுப்படுத்தக் கோரி மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், கிளிநொச்சி அரும்பு மாவட்ட பெண்கள் அமைப்பு, கிளிநொச்சி தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஆகியன இணைந்து கிளிநொச்சி போராட்டத்தை முன்னெடுத்தனர். (படம்-சப்தசங்கரி,தேவானந்தன்)

# வட பிராந்திய போக்குவரத்து சேவையில் அரசியல் சீர்கேடுகள்

## கஜேந்திரன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

வட பிராந்திய போக்குவரத்து சேவையில் அரசியல் சீர்கேடுகள் நடைபெறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் நிறைவுற்ற காலப் பகுதியிலிருந்தே வட மாகாண போக்குவரத்து சேவையில் அரசியல் சீர்கேடுகள், முறைகேடுகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

அதாவது 2010-2015 ஆட்சி அமைத்த அரசானது நியமித்த போக்குவரத்து சபை ஊழியர்களை அதன் பிற்பாடு ஆட்சிப்பீடம் ஏறும் அரசு அவர்களை பதவியில் இருந்து நீக்கி தமக்கு சாதகமானவர்களை அப்பதவியில் நியமிப்பதும் அதன் பிற்பாடு வரும் அரசு மீண்டும் அவர்களை பதவியில் இருந்து நீக்கி வேறு நபர்களை அப் பதவிக்கு நியமிக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

மேலும் போக்குவரத்தின் போது ஏற்படும் விபத்துக்களுடன் தொடர்புபட்ட சாரதிகளின் விசாரணைகள் அடங்கிய கோவைகள் கொழும்புக்கு அனுப்பப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

அவ்வாறு இல்லாது அக் கோவைகளை வட மாகாணத்திலே உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பித்து அதற்கான விசாரணைகளை நடத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் வட மாகாண போக்குவரத்து சேவைக்கென நிரந்தரமான ஒரு தொடர்பு மேலாண்மை உத்தியோகத்தர் (CRM) இல்லை எனவும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவர் அநுராதபுரத்தை சேர்ந்தவர் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான பதவிகளுக்கு வட மாகாணத்தில் நிரந்தரமாக உள்ள ஓர் அதிகாரியை நியமிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கோரிக்கை விடுத்தார். (ஜ-4)

# கொரோனா சமூகம் முழுவதும் பரவல்

## திஸ்ஸ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தற்போது கொத்தணிகளுக்குள் மாத்திரமின்றி சமூகம் முழுவதும் பரவி வருவதாக நாட்டில் உள்ள கொரோனா வைரஸ் தொடர்பான நிபுணரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் உலகத்தில் பரவி வரும் வைரஸ் என்பதால், அதனை எதிர்கொள்ளும் நோய் எதிர்ப்பு சக்தி மனிதர்களிடம் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த வைரஸ் நாட்டில் சமூகம் முழுவதும் பரவி உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள சிலர் விரும்பவில்லை, எனினும் உண்மையை எதிர்கொண்டு, அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றியவர்களில் 80 வீத மானவர்களுக்கு எந்த நோய் அறிகுறிகளும் தென்படுவதில்லை என்பது உறுதியாகி இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து முல்லைத்தீவு மீனவர்கள் போராட்டம்

## தொடர் போராட்டத்திலும் குதித்தனர்



(பனிக்கன்குளம்)

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலை கண்டித்து முல்லைத்தீவில் கடற்றொழில் அமைப்புக்கள், மீனவர்கள், அரசியல் பிரதிநிதிகள் இணைந்து நேற்று கவனயீர்ப்பு பேரணி ஒன்றை நடத்தியதோடு மாவட்ட செயலகம் முன்பாக கொட்டகை அமைத்து தொடர் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், முல்லைத்தீவு பிரதேச வர்த்தக சங்கம், முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவு சங்கம், பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், முல்லைத்தீவு சிகை அலங்கரிப்பாளர் சங்கம், கரைதுறைப்பற்று கிராமிய அபிவிருத்திச்சங்கம் ஆகியன போராட்டத்திற்கு முழுமையான ஆதரவினை வழங்கியுள்ளன.

இந்நிலையில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள வணிக நிலையங்கள் சந்தைகள், அனைத்தும் பூட்டப்பட்டு எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளன.

மீனவர்களின் தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது கொட்டும் மழையிலும் முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து ஆரம்பமாகி மாவட்ட செயலகம் வரை சென்று மாவட்ட செய லகத்தின் முன்னால் கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தத்துடன் முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனிடம் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மற்றும் சம்மேளனத் தலைவர் ஆகியோரால் மனு கையளிக்கப்பட்டது.

மனுவின் பிரதிகள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், கடற்றொழில்அமைச்சர், வட மாகாண ஆளுநர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

இதன்போது தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான, செ.கஜேந்திரன், சாள்ஸ்நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்களிடமும்மனுக்கள்கையளிக்கப்பட்டுள்ளன. (5-4-281)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக எடுக்கப்படும் முயற்சிக்கான பிரேரணை கரைச்சி பிரதேச சபையில்

(முறிகண்டி)

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக எடுக்கப்படும் முயற்சிக்கான கவனயீர்ப்புப் பிரேரணை கரைச்சி பிரதேச சபையில் 20 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை அறவிடப்பட்டு வந்த 10 வீத ஆதன வரிக்கு சபை உறுப்பினர்களும், மக்களும் எதிர்ப்பு வெளியிட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற அமர்வில் விசேட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி வர்த்தக செயற்பாடுகளிற்கு 8 வீதமாகவும், நகர்ப்புற பகுதிகளிற்கு 7 வீதமும் ஏனைய பிரதேசங்களிற்கு 6 வீதமாகவும் ஆதனவரியினை அறவீடு செய்வதாக பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த பிரேரணை தொடர்பான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் 11 பேரும்,ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரும் சபை நடவடிக்கையிலிருந்து வெளியேறியிருந்தனர்.

தொடர்ந்தும் இடம்பெற்ற சபை அமர்வின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 17 பேரும், தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர் ஒருவரும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவருமாக 20 பேர் வாக்களிப்பின் போது ஆதரவாக வாக்களித்தனர் என தெரிவித்தார்.

இதேவேளை அரசியல் கைதிகளின் விடுதலைக்காக எடுக்கப்படும் முயற்சிக்கான கவனயீர்ப்புப் பிரேரணை கரைச்சி பிரதேச சபையில் கொண்டுவரப்பட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஜ-4-5-100)

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சபை நிதி - 2020

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016 (1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு, கட்டிட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021 205 8867, தொலைநகல்: 021-205 8866) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை 16.12.2020 ஆம் திகதியில் இருந்து 29.12.2020 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 16.12.2020 ஆம் திகதியிலிருந்து 29.12.2020 ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 30.12.2020 ஆம் திகதி பி.ப 13.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலி கிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 22.12.2020 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

11. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது. பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. கேள்வி ஆவணங்களை வழங்கும்போது கொரோனா (COVID 19) வைரஸ் தொற்றுத் தொடர்பான சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும், கேள்வி ஆவணங்களை பெறவரும்போது கூட்டமாக வருவதை தவிர்த்து ஒருவர் மட்டும் வருகை தரவேண்டும், சுகாதார முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வருகை தர வேண்டும்.

| தொ இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மி) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/2/Council/PII/01/2020 | திண்மக்கழிவு தரம் பிரித்தல் நிலையத்தில் சுற்றுமதில்,கேற் மற்றும் வீதி அமைத்தல், நீர்வேலி | 4.01 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 40,150.00 | 27.04.2021 (118 நாட்கள்) |
| 02 | NP/14/41(13)/2/Council/PII/02/2020 | கோட்டைக்காடு 1ம்ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.64 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 6,500.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 03 | NP/14/41(13)/2/Council/PII/03/2020 | சின்னக்கோவில் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.81 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 8,150.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 04 | NP/14/41(13)/2/Council/PII/04/2020 | புதிய செம்மணி வீதி திருத்தம் கட்டம் 1, இருபாலை தெற்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,280.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 05 | NP/14/41(13)/2/Council/PII/05/2020 | கத்தோலிக்க பாடசாலை 1ம் வீதி 2ம் குறுக்கு ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 06 | NP/14/41(13)/2/Council/PII/06/2020 | கற்பகபிள்ளையார் வீதி 3ம் ஒழுங்கை திருத்தம் கட்டம் 1, உரும்பிராய் வடக்கு | 0.73 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 7,360.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 07 | NP/14/41(13)/2/Council/PII/07/2020 | ஆனந்தகானம் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 1.42 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 14,250.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 08 | NP/14/41(13)/2/Council/PII/08/2020 | ஊரெழு பிள்ளையார் வீதி திருத்தம் | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,360.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 09 | NP/14/41(13)/2/Council/PII/09/2020 | இராச வீதி 203/ உப ஒழுங்கை திருத்தம் கட்டம் 1, கோப்பாய் தெற்கு | 0.46 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 4610.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 10 | NP/14/41(13)/2/Council/PII/10/2020 | வேம்படி ஞானவைரவர் கோவில் வீதி திருத்தம், நீர்வேலி தெற்கு | 1.16 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 11,610.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 11 | NP/14/41(13)/2/Council/PII/11/2020 | தம்பாகடவை குடியிருப்பு வீதி திருத்தம், வளலாய் | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,310.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 12 | NP/14/41(13)/2/Council/PII/12/2020 | மடத்தடி வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.48 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 14,850.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 13 | NP/14/41(13)/2/Council/PII/13/2020 | சித்திரவேலாயுதர் கோவில் வீதி திருத்தம் கட்டம் 1, அச்சுவேலி வடக்கு | 1.39 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 13,940.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 14 | NP/14/41(13)/2/Council/PII/14/2020 | விநாயகர் வீதி திருத்தம், பத்தைமேனி | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9290.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 15 | NP/14/41(13)/2/Council/PII/15/2020 | வேளங்காடு அம்மன் வீதி திருத்தம், கட்டம் 2, வாதரவத்தை | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,260.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 16 | NP/14/41(13)/2/Council/PII/16/2020 | எல்லாளன் வீதி திருத்தம் (மிகுதி வேலைகள்) நிலாவரை | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,340.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 17 | NP/14/41(13)/2/Council/PII/17/2020 | சந்தை ஒழுங்கை திருத்தம், ஆவரங்கால் | 0.94 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,420.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 18 | NP/14/41(13)/2/Council/PII/18/2020 | சிறுவர் பூங்கா திருத்தம், கட்டம் 1, நீர்வேலி | 1.74 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 1,7430.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 19 | NP/14/41(13)/2/Council/PII/19/2020 | ஞானவைரவர் வீதி திருத்தம், கட்டம் 2, சிறுப்பிட்டி கிழக்கு | 8.97 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 89,780.00 | 27.04.2021 (118 நாட்கள்) |
| 20 | NP/14/41(13)/2/Council/PII/20/2020 | கிந்துசிட்டி மாதிரி கிராம வீதி திருத்தம், கட்டம் 2, புத்தூர் மேற்கு | 2.79 | 60 நாட்கள் | C8 அல்லது C9 | 27,980.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 21 | NP/14/41(13)/2/Council/PII/21/2020 | சொக்கன்திடல் ஞானவைரவர் வீதி திருத்தம், கட்டம் 1, புத்தூர் கிழக்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 22 | NP/14/41(13)/2/Council/PII/22/2020 | அம்மன் கோவில் தெற்கு குடியேற்ற இணைப்பு வீதி திருத்தம், கட்டம் 1, அச்செழு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 23 | NP/14/41(13)/2/Council/PII/23/2020 | இருபாலை கிழக்கு வீதி – உதயதாரகை இணைப்பு வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,310.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 24 | NP/14/41(13)/2/Council/PII/24/2020 | வள்ளியம்மன் முன்பள்ளி ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.85 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 18,590.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 25 | NP/14/41(13)/2/Council/PII/25/2020 | மகிழடி வீதி திருத்தம், கோப்பாய் வடக்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9.330.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 26 | NP/14/41(13)/2/Council/PII/26/2020 | பொக்கனை வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 0.90 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9.040.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 27 | NP/14/41(13)/2/Council/PII/27/2020 | சிவன் வீதி - கந்தன் நீர்வேலி வீதி 4ம் ஒழுங்கை, ஞானவைரவர் வீதி 8ம் ஒழுங்கை, சிவன் 1ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9.320.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 28 | NP/14/41(13)/2/Council/PII/28/2020 | அன்னங்கை வீதி உப ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் மேற்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 29 | NP/14/41(13)/2/Council/PII/29/2020 | அம்மன் கோவில் பின் வீதி திருத்தம், சிறுப்பிட்டி | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9.300.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 30 | NP/14/41(13)/2/Council/PII/30/2020 | விநாயகர் வீதி மற்றும் உப ஒழுங்கைகள் புனரமைப்பு, கல்வியங்காடு | 1.79 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 17.940.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 31 | NP/14/41(13)/2/Council/PII/31/2020 | கல்லூரி வீதி மற்றும் பைத்தோலை 1.2 ஆம் உப ஒழுங்கைகள் திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.10 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 11,100.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 32 | NP/14/41(13)/2/Council/PII/32/2020 | விக்னேஸ்வரா வீதி 1,2 ஆம் உப ஒழுங்கைகள் திருத்தம், அச்சுவேலி தெற்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,200.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 33 | NP/14/41(13)/2/Council/PII/33/2020 | கந்தவளவு வீதி திருத்தம், ஆவரங்கால் மேற்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,320.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 34 | NP/14/41(13)/2/Council/PII/34/2020 | வேம்பன் வீதி 14, 16 ஆம் ஒழுங்கைகள் திருத்தம், உரும்பிராய் தெற்கு | 1.20 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 12,090.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 35 | NP/14/41(13)/2/Council/PII/35/2020 | கோப்பாய் வீதி 10 ஆம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் தெற்கு | 2.84 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 28,420.00 | 27.04.2021 (118 நாட்கள்) |
| 36 | NP/14/41(13)/2/Council/PII/36/2020 | ஞானவைரவர் வீதி 5 ஆம் ஒழுங்கை திருத்தம், நீர்வேலி வடக்கு | 0.72 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 7,240.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 37 | NP/14/41(13)/2/Council/PII/37/2020 | விளான் வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், நீர்வேலி தெற்கு | 0.70 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 7.080.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 38 | NP/14/41(13)/2/Council/PII/38/2020 | மாதா கோவில் பின் வீதி 2ம் ஒழுங்கை ( அம்புலியப்புல வீதி 9.ஆ உப ஒழுங்கை) திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.12 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 11,290.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 39 | NP/14/41(13)/2/Council/PII/39/2020 | கோண்டாவில் வீதி 133.ஆ உப ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.56 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 15,630.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 40 | NP/14/41(13)/2/Council/PII/40/2020 | வைத்தியசாலை வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.42 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 14,260.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 41 | NP/14/41(13)/2/Council/PII/41/2020 | மீன் சந்தை கட்டுமானம், அச்சுவேலி | 8.62 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 86,280.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 42 | NP/14/41(13)/2/Council/PII/42/2020 | வாகையடி வீதி 3 ஆம் மற்றும் 17.ஆ உப ஒழுங்கைகள் திருத்தம், உரும்பிராய் வடக்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,320.00 | 27.04.2021 (88 நாட்கள்) |
| 43 | NP/14/41(13)/2/Council/PII/43/2020 | பிள்ளையார் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், புத்தூர் | 1.61 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 16,150.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 44 | NP/14/41(13)/2/Council/PII/44/2020 | பன்னாலை வீதி திருத்தம், நீர்வேலி வடக்கு | 0.52 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 5,200.00 | 28.03.2021 (88 நாட்கள்) |

(C-920)

**தியாகராசா நிரோஷ், தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,**
**யாழ்ப்பாணம், வடமாகாணம். 15.12.2020**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 19 . 09 . 1962

இறப்பு 15 . 11 . 2020

அமரர்.
## வதனராசா மகாதேவி

அன்பான உங்கள் முகத்தை
எப்போது காண்போமோ?
பண்பான உங்கள் குணம் போல்
பாரினில் யாரும் வருமோ?
இனி எப்போது உமைக் காண்போம்
எனும் ஏக்கம் எமை வாட்டி வதைக்கிறதே!

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி 15.12.2020 நேற்று நடைபெற்ற எமது குடும்பத் தலைவியின் 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்

மயிலிட்டி வடக்கு,
முளவை. 077 036 6260 (4953)

குடும்பத்தினர்
(மருமகன்).


# கெப் ரக வாகனம் விபத்து; ஒருவர் பலி; 10பேர் காயம்



(கொழும்பு)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஊவாகலை பகுதியில் கெப் ரக வாகனமொன்று 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக் குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துநேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

லிந்துலை ஊவாகலை பகுதியில் வீதியொன்றை புனரமைப்பதற்காக சீமெந்து மூடைகளை ஏற்றிச்சென்ற கெப் ரக வாகனமே, இயந்திரக்கோளாறு காரணமாக இவ்வாறு விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ஜ)


# மரண அறிவித்தல்



இரண்டாம் குறுக்குத்தெரு
நல்லூர்

## செல்லையா தர்மகிருஷ்ணன் (கண்ணன்)

நல்லூர் இரண்டாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகக் கொண்ட கண்ணன் அச்சக உரிமையாளரான செல்லையா தர்மகிருஷ்ணன் (கண்ணன்) அவர்கள் 14.12.2020 அன்று காலமானார்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றே நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(C-926)

தகவல்:-
குடும்பத்தினர்


# ஒரு இலட்சம் காணிகள் வழங்கல் மன்னாரில் தெளிவூட்டும் கருத்தமர்வு



(மன்னார்)

இளம் தொழில் முனைவோருக்கு நாடு முழுவதும் ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கும் நிகழ்ச்சி திட்டம் அரசினால் அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த காணி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மன்னார் மாவட்டத்தில் இருந்து காணிகளை பெற்றுக் கொள்ள விண்ணப்பித்த இளைஞர், யுவதிகளுக்கு தெளிவூட்டும் விசேட கருத் தமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், அதன் குழுமத் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் குறித்த தெழிவூட்டும் கருத்தமர்வு இடம் பெற்றது.

அரசின் ஒரு இலட்சம் காணிகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன் னார் மாவட்டத்தில் காணிகளை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்த இளைஞர், யுவதிகள் இடம் பெறவுள்ள நேர்முகத் தேர்வில் எவ் வாறு முகம் கொடுப்பது, குறித்த காணியை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுதல் உள்ளிட்ட பல் வேறு விடய ங்கள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.(ஜ-4-5-285)

# பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துவோருக்கு

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துபவர்கள் நின்ற நிலையில் பயணம் செய்வது தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.பயணிகள் போக்குவரத்து சேவைகள் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொலிஸாருக்கு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

அதன்படி, பயணிகள் போக்குவரத்தின்போது இருக்கை வசதிக்கு ஏற்ப மட்டுமே பயணிகளை கொண்டு செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.மேலும், அத்தகைய வாகனம் செல்லும் போது எந்த பயணிகளும் நின்ற நிலையில் பயணிக்கக் கூடாது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் சனமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் இரத்த தான முகாம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் கோண்டாவில் சந்திக்கு அருகில் இருபாலை வீதியில் அமைந்துள்ள குட்டிச்சுட்டி முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் உதிரம் கொடுத்து உயிர்காக்க அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# பயிலுநர்களை நிரந்தரமாக்கக்கோரி கவனயீர்ப்புப் போராட்டம்

(சாவகச்சேரி)

ஒரு வருட கால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த சகல பட்டதாரிப் பயிலுநர்களையும் உடனடியாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்குமாறு கோரி கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.(5-30)


# கண்ணீர் அஞ்சலி



அமரர். துரையப்பா சதானந்தம்

எமது ஆலயத்தின் முன்னாள் தலைவர் திரு.நா.சண்முகரட்ணம் அவர்களின் சகலனும், ஆலயத்தின் ஆயுட்கால அங்கத்தவர் திருமதி.சதானந்தம் ஜெயபூபதி அவர்களின் பாசமிகு கணவருமாகிய துரையப்பா சதானந்தம் அவர்கள் லண்டனில் காலமானார் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4969)

நிர்வாகசபை
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொக்குவில்.

# கொரோனாத் தொற்று சமூக மட்டத்தில் பரவும் போது 30 வீதமானோர் நோய் அறிகுறியின்றி இருப்பர்

## வைத்தியர் யமுனானந்தா சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

**கொரோனாத் தொற்று சமூக மட்டத்தில் பரவும்போது கண்ட றியப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையில் 30 வீதத்தினர் நோய் அறிகுறியற்றவர்களாகக் காணப் படுவர். ஒருவரின் உடலில் நோய்க்கிருமித் தொற்று இருப்பின் மூன்று கிழமை வரை ஏனையவர்களுக்குத் தொற்ற வாய்ப்புள்ளது என யாழ். போதனா வைத்திய சாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனா னந்தா தெரிவித்துள்ளார்.**

கொரோனாத் தொற்றுத் தொடர்பாக நோய் அறிகுறி, தொற்றாளருடன் தொடர்புடை யவர்களில் பி.சி.ஆர்.பரிசோ தனை மேற்கொள்ளலாம்.

சமூகத்தில் எழுந்தமான மாக யாரிடமும் பரிசோதனை மேற்கொள்ளமுன் அந்நபரிட மிருந்து எழுத்துமூல அனுமதி பெறப்படல் வேண்டும்.

மேலும் கொரோனா ஆய்வு கூட முடிவுகள் கூறுவதற்கு முன் தனிமனித ஆற்றுப்படுத் தலும் குடும்ப ஆற்றுப்படுத் தலும் வழங்கப்படல் வேண் டும்.

உலக சுகாதார நிறுவனத் தின் வழிகாட்டலில் கொரோ னாக் கட்டுப்பாட்டில் மனித உரிமை அணுகுமுறையினைக் கடைப்பிடிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

நோயாளி தொடர்பான தக வல்களை விளம்பரப்படுத்தல் தவறானது. மாறாக இராணுவ ரீதியிலான கொரோனாக் கட்டுப் பாடு வெறும் புள்ளிவிபரங்களு டன் மட்டும் நிற்கும்.

எனவே நாம் மிகவும் இக் கட்டான சூழ்நிலையிலேயே கொரோனாத் தடுப்பு முயற்சி களை மேற்கொள்கின்றோம்.

இன்று இலங்கையில் சுமார் 32,000 பேர் கொரோனாத் தொற்றுடைய நோயாளிகளாக அடையாளங் காணப்பட்டுள் ளனர்.

எனவே சுமார் 9600 பேர் கொரோனாத் தொற்றுடன் அறி குறி இல்லாது சமூகத்தில் காணப்படலாம்.

ஆற்றுநீரின் வெள்ளத் தினை அளவிடுவது போன்றே கொரோனாத் தொற்றின் அள வினைக் கண்டறியும் பரிசோ தனை முடிவுகள் ஆறு பெருக் கெடுத்து ஓடும்போது அதன் வெள்ளத்தை அளவிடுவது மடமையாகும்.

மாறாக வெள்ளத்தை தடு த்தல், வெள்ளப் பாதிப்பைக் குறைத்தல் என்பனவே அவ சியமாகும். அதேபோல் தற்போ தைய சூழலிலும் கொரோனா நோயாளிகள் அடையாளப்படு வதனை எண்ணிக்கையில் மட்டும் கருத்தில் கொள்ளாது, கொரோனாத் தொற்றைத் தவிர் ப்பதற்கும் செய்ய வேண்டிய முற்பாதுகாப்புக்களை ஒவ் வொருவரும் தனிமனிதர்க ளாகச் செய்ய வேண்டும்.

கொரோனா நோய்க்கான பிரத்தியேகச் சிகிச்சை இல்லாத சூழலில் ஒருவரைக் கட்டாயப் படுத்தி கொரோனா நோய் பரி சோதனைக்கு உட்படுத்தல் மனித உரிமை ரீதியில். சரி யானதல்ல.

அதேபோல் இறந்த ஒரு வரின் உடலில் கொரோனா நோய்க்கிருமியின் தொற்றும் தன்மையைவிட நோய் அறி குறி காட்டாது.


கொரோனாத் தொற்றுடைய நபர், சமூகத்தில் கொரோனா நோயினைப் பரப்புவர். எனவே இறந்த கொரோனாத் தொற்று டையவரின் உடலை புதை த்தல், உயிருள்ள கொரோ னாத் தொற்று நோயாளரை நடமாட விடுவதைவிட ஆபத் தானதல்ல. அதாவது இறந்த உடல்களை புதைத்தல் கொரோ னாத் தொற்றாளர்கள் நோய் அறிகுறிகள் இல்லாத போது சமூக த்தில் நடமாடவிடுவதை விட ஆபத்தானதல்ல.

காசநோய்க் கட்டுப்பாட்டிற் கான சமூக அணுகல்கொரோனா நோய்க் கட்டுப்பாட்டிலும் பயன் படும். காசநோய் ஒருவரில் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட கொரோனா நோய் ஒருவரில் ஏற்படுத்தும் தாக்கம் மிகக் குறைவு எனவும் தெரிவித் தார்.

அத்துடன் உலக சுகாதார நிறுவன ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (5-4-33)



**இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் டெங்கொழிப்பு செயற்றிட்டத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இளவாலை கிராமத்தின் 7 கிராம உத்தியோ கத்தர் பிரிவிற்கும் சென்று தயார் செய்த கழிவுப் பொருட்களின் பொதிகளை சேகரித்து பிரதேச சபை வாகனத்தின் மூலம் அகற்றினர். சங்கத்தின் அறிவுறு த்தலுக்கு அமைய கழிவுகளை மக்கள் பொதி செய்து வைத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (5-4)**



**குருநகர் றெக்களமேசன் மேற்கு ஜே/69 கிராம உத்தியோகத்தர் அலுவலகம் உட்பட சமுர்த்தி அலுவல கம், அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் ஆகிய வற்றை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் அண்மையில் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் மற்றும் கிராம உத்தியோகத்தர் எஸ். குருதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: ஏனஸ்ட்)**

# வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள சமுர்த்தி வங்கி துணையாகவிருக்கும்

## மன்னார் அரச அதிபர்

(மன்னார்)

மக்களின் ஏழ்மை நிலை யைப் பயன்படுத்தி பல்வேறு நுண்நிதி நிறுவனங்கள் பெண் களை ஏமாற்றிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

எனவே அவற்றை எல்லாம் தீர்க்கவும் அதன் மூலம் உங் கள் வாழ்க்கைத்தரத்தை உயர் த்திக்கொள்ளவும் சமுர்த்தி வங்கியின் செயற்பாடு உங்களு க்கு துணையாக இரு க்கும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரா ன்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சமுர்த்தி வங்கியின் செயற் பாடுகள் கணணிமயப்படுத் தப்பட்டு நேற்று வைபவ ரீதி யாக திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது கலந்துகொ ண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், சமுர்த்தி என்பது வறு மைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கான செயற்றிட்டமாக காணப்படுகின்றது.


அந்த செயற்றிட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் சுமார் 24 ஆயிரம் பயனாளிகள் உள் ளனர். இவர்களுக்கு மாதாந் தம் 40 மில்லியன் ரூபாய் நிதி சென்று கொண்டிருக்கின்றது.

மாவட்டத்தில் அதி கூடிய நிதி தொகையை கொண்ட திணை க்களமாக சமுர்த்தி திணை க்களம் காணப்படுகின்றது.

சமுர்த்தி பணத்தை பெற்றுக் கொள்ள மக்களாகிய நீங்கள் எவ்வளவு நாட்கள் காத்திரு ந்திருப்பீர்கள் என்று தெரியும். ஆனால் இனி அந்த கஷ்டம் உங்களுக்கு இல்லை.

சில தினங்களின் பின்னர் இலகுவாக நீங்கள் பணத்தை பெற்றுக்கொள்ள முடியும். நுண் நிதிக்கடன் எமது மாவட்டத்தில் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்று அனைவரு க்கும் தெரியும் என அவர் தெரி வித்தார். (5-4-285)

# செயலாளர் விடுதி மீதான தாக்குதலுக்கு கண்டனப் போராட்டம்



(பனிக்கன்குளம்)

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் விடுதி மீது இனம் தெரியாத நபர்களினால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் சம் பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மாந்தை கிழக்கு பிரதேச செய லக உத்தியோகத்தர்கள் அனை வரும் நேற்றுக்காலை கண் டன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 10 ஆம் திகதி மாந்தை கிழக்கு பிரதேச செய லரின் உத்தியோகபூர்வ தங்கு மிட விடுதி மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் மேற்கொண்ட தாக்குதலை கண்டித்தே குறி த்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. "அரச அதிகாரிகளின் பாதுகா ப்பை உறுதிப்படுத்து" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதா கைகளை தாங்கியவாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஊழியர்கள் ஈடுபட்டனர். (5-4-281)

# நடுத்தர வர்க்கத்தினருக்கு வீடுகள்

## பிரதமர் உத்தரவு



(கொழும்பு)

குறைந்தளவிலான வசதி கொண்ட குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கான வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் தொடர்பாக அந்த அதிகார சபையின் அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக நிர்மாணிக்கப்படும் 7 ஆயிரத்து 500 வீடுகளில், 4 ஆயிரம் வீடுகள் குறைந்த வசதி கொண்ட குடியிருப்புகளில் வசிப்போரை மீள்குடியேற்றுவதற்காக நிர்மாணிக்கப்படுவதுடன், எஞ்சிய 3 ஆயிரம் வீடுகள் நடுத்தர வர்க்கத்தினருக்காக ஒதுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நடுத்தர வர்க்கத்தினருக்காக வீடுகளை பெற்றுக்கொடுக்கும் போது குறைந்தபட்ச ஆரம்ப கொடுப்பனவில் வீட்டு உரிமையை பெற்றுக்கொடுக்கும் முறையொன்றை உருவாக்குமாறு பிரதமர் இதன்போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய மத்திய வர்க்கத்தினருக்கான வீடமைப்பு திட்டத்தை செயற்படுத்தும் போது பயனாளர்களுக்கு 30 ஆண்டுகள் வரை 6.25 என்ற வட்டி வீதத்தில் வீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பல காலமாக செயற்படுத்துவதாக தெரிவித்து தாமதிக்கப்பட்டு வந்து தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடங்களின் பணிகள் தொடர்ந்தும் தாமதிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அதற்கமைய அரச காணிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்களில் அவற்றை பெற்று இந்த வாகன நிறுத்த வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு அதிகாரிகளின் ஒப்புதல் கிட்டியுள்ளது.

மேலும் பல்வேறு நிதி உதவிகளின் கீழ் முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டங்கள் வடக்கு, தெற்கு மற்றும் மலையகத்திற்கு மாத்திரமின்றி நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சாதாரண மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என பிரதமர் இதன்போது வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# விமானம் விபத்து விமானி உயிரிழப்பு



(கொழும்பு)

காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட இலங்கை விமானப் படையின் PT-6 வகை பயிற்சி விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய், ஜனரஞ்சன குளத்திற்கு அருகில் குறித்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

மேலும் குறித்த விமானத்தில் பயிற்சியை மேற்கொண்ட விமானியும் உயிரிழந்துள்ளதாகவும் விமானப்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை சீனக்குடாவிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை புறப்பட்ட இலங்கை விமானப்படைக்கு சொந்தமான PT-6 விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த விமானம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கை விமானப்படை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்களின் நடவடிக்கைக்கு அமையவே நாட்டை முடக்குவது தொடர்பில் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்கள் அதிகளவில் வீதிகளில் இறங்கிச் செயற்பட்டால் நாட்டை முடக்க நேரிடும் என கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கை மத்திய நிலையத்தின் பிரதானியான இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் இந்த மாதத்திலும் இருக்கக்கூடும். அடுத்த மாதமளவில் அதனை பெரும்பாலும்கட்டுப்படுத்த முடியும்.

கொரோனா பரவிய ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை நல்ல நிலைமையில் இருக்கின்றது.

சுகாதாரத் துறையினர் மற்றும் பாதுகாப்பு தரப்பினரின் அர்ப்பணிப்பு காரணமாகவே கொரோனாவை இந்தளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

எவ்வாறாயினும் முழு நாட்டை முடக்க எதிர்பார்க்கவில்லை.

அத்துடன் நாட்டிற்குள் பெரியளவில் வைபவங்களை நடத்தவும் முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சடலங்களை மாலைதீவுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை சாத்தியமற்றது!



(கொழும்பு)

கொரோனா தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை மாலைதீவுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை என்பது நடைமுறை சாத்தியமற்றது என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இதனைத் கூறினார்.

நாட்டிற்குள்ளேயே அடக்கம் செய்ய அனுமதிப்பதன் மூலம் பொதுமக்கள் அல்லது அரசாங்கத்தால் ஏற்படும் செலவைக் குறைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

விஞ்ஞான ரீதியில் பகுப்பாய்வு செய்வதன் மூலம், கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய பொருத்தமான இடத்தை அடையாளம் காண வேண்டும் எனக் கூறினார்.

இந்த நடைமுறை உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது என்றும் அனைத்து தரப்பினருடைய உரிமைகளும் பாதுகாக்கப்படு வதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (ஐ)

# கித்துள் செய்கையை விரிவுபடுத்த தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் கித்துள் செய்கையை பிரதான பெருந்தோட்ட செய்கையாக பெயரிடவும் கித்துள் அபிவிருத்தி அதிகார சபையை நிறுவுவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

கித்துள் செய்கையானது நாட்டின் தனித்துவமான மற்றும் அந்நிய செலாவணியை ஈட்டித்தரக்கூடிய துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கிலான பொருளாதாரத்தை விஸ்தரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கித்துள் செய்கையை மேலும் விரிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

**JAFFNA MEDICAL ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING - 2021**
**NOTICE OF MEETING**

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Saturday, 30th January 2021 at 11.00 a.m. at the Nursing Training School (NTS) Lecture Hall, Teaching Hospital Jaffna, (THJ) for the following purposes;

1. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2020 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
3. To elect the committee of management for year 2021.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

**By order of the committee of management,**
**Honorary Secretary**
**16th December 2020**

(C-918)

# பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையினருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறை சார்ந்தவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்க அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இவர்களுக்காக ஏற்கனவே பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறையை முன்னெடுத்துச் செல்வதற்காக வங்கிகள் மூலம் இதுவரை 150 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தை திறந்தாலும் இந்தத் துறையை வழமைக்கு கொண்டுவர எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

சுற்றுலாத் துறை வழமை நிலைக்குத் திரும்பும் வரை இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை கவனித்துக்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# தூண்கள் ஏற்றிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானது




(குருமன்காடு)

வவுனியா - செட்டிகுளம் பிரதான வீதியூடாக மின் இணைப்புக்கான தூண்களை ஏற்றிச் சென்ற வாகனம் நேற்றுக்காலை உலுக்குளம் பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

மின் இணைப்புக்கான தூண்களை ஏற்றிக் கொண்டு வவுனியா - செட்டிகுளம் பிரதான வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்த வாகனம் உலுக்குளம் பகுதியில் வீதி திருத்தும் பணிகளுக்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

வீதியை விட்டு விலகிப் பள்ளத்தில் வீழ்ந்த வாகனத்தை மீட்கும் நடவடிக்கையில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (5-4-250)

# குடிசை தீயினால் நாசம்



(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம், பயரிக்குளம் பகுதியில் குடிசை ஒன்று நேற்று அதிகாலை தீயில் எரிந்து நாசமாகியுள் ளது.

வவுனியா, செட்டிகுளம், பயரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக குடிசை தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

குடிசையில் இருந்த தந்தை, தாய் மற்றும் ஒரு வயது குழந்தை ஆகியோர் அயலவர்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்ட போதும்குடிசையில்இருந்த உடைமைகள் முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ விபத்துக்குரிய காரணம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-250)

# பழைய பேருந்து நிலையத்தில் சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்

(நெளுக்குளம்)

வர்த்தகர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சின் இணைப்பு செயலாளருக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடல் பழைய பேருந்து நிலையம் மீண்டும் இயங்குதல் தொடர்பாகவும், வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வன்னி மாவட்ட இணைப்பாளரும், போக்குவரத்துத்துறையின் வன்னிக்கான இணைப்புச் செயலாளருமான பாலித விக்ரமசிங்கவுக்கும், வவுனியா வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் வர்த்தக சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பழைய பேருந்து நிலையம் தொடர்பாக கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வின் அறிக்கை அமைச்சின் இணைப்புச் செயலாளர் பார்வையிட்டிருந்ததுடன் பழைய பேருந்து நிலையத்தில் இருந்தும் மிக விரைவில் பேருந்து சேவை மேற்கொள்ள நடவடிக்கையை எடுப்பதாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகளிற்கு உறுதியளித்திருந்தார்.

இக் கலந்துரையாடலில் வர்த்தக சங்க தலைவர் எஸ். சுஜன், செயலாளர் ஆ.அம்பிகைபாகன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-299

# ‘வைர முத்துக்கள்’ கவிதை நூல் வெளியீடு



(மன்னார்)

மன்னார் மாவட்ட வெற்றிக் கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் கவிஞர் வை. கஜேந்திரன் எழுதிய "வைரமுத்துக்கள்" சிறுவர் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் தமிழமுது நண் பர்கள் வட்டத்தின் ஆலோசகர் எஸ்.விமலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நூலினை வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் டிலாசால் இல்ல இயக்குநர் அருட் சகோதரர் எஸ்.ஸ்ரனிஸ்லஸ், மன்னார் அல்-அஸ்ஹர் தேசிய பாட சாலை அதிபர் எம்.வை. மாஹீர் ஆகியோர் விருந்தி னர்களாகக் கலந்து கொண்டனர். (5-4-285)

# மரக்கடத்தல் முறியடிப்பு



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் டிப்பர் வாகனத்தின்மூலம் பெறுமதிமிக்க 19 பாலைமரக்குற்றிகளை சூட்சுமமான முறையில் மேற்பகுதியில் மணல் ஏற்றி கீழ் பகுதியில் பாலைமரக் குற்றிகளை ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படவிருந்த மரக்கடத்தல் நேற்று முன் தினம் அதிகாலை 5 மணியளவில் தருமபுரம் பொலிஸாரால் பிடிக்கப்பட்டதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார்.


நேற்றைய தினம் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்துள்ளார். (5-4-316)

# நீரை வெளியேற்றி பயிரைக் காக்கும் முயற்சியில் மன்னார் விவசாயிகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் பெரும்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்டன.

இதனால் விவசாயிகள் அழிவைச் சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.



குறிப்பாக பிரதான வாய்க்கால்களில் தொடர்ச்சியாக நீர் வழிந்து செல்வதாலும் இடையிடையே மழை பெய்து கொண்டிருப்பதாலும் வயல்களில் தேங்கியிருக்கும் நீர் வெளியேற முடியாது தேங்கியுள்ள நிலையில் காணப்பட்டதோடு, வாய்க்கால்களும் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

வயல் நிலங்களில் காணப்படும் நீரை வெளியேற்றும் வகையில் வாய்க்கால் துப்புரவு செய்யப்பட்டு, இயந்திரங்கள் மூலம் நீரை இறைத்து வெளியேற்றி பயிர்களை காப்பாற்றும் முயற்சியில் மன்னார் விவசாயிகள் ஈடுபட்டு வருகின் றனர்.

இதனால் எஞ்சியுள்ள விவசாயச்செய்கையை காப்பாற்ற முடியும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.(5-4-285)

# விபத்து

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை விள க்கு வைத்தகுளம் பகுதியில் யூரியா ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று நேற்று முன்தினம் இரவு விபத்திற்குள்ளாகியதுடன், அதன் சாரதி தப்பி ஓடியுள்ளார்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கி யூரியாவை ஏற்றிச் சென்ற வாகனம் ஓமந்தை பகுதியில் சென்று கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளாகியது.

இதனால் வாகனம் குடை சாய்ந்த நிலையில் அதன் சாரதி அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-299)

## இராசிபலன்

16.12.2020
மார்கழி 01, புதன்கிழமை
துதியை முன்னிரவு 7.31 மணிவரை
பூராடம் முன்னிரவு 10.59 மணிவரை
சுபநேரம் 4.52-6.22 மணிவரை
இராகுகாலம் 12.22-1.52 மணிவரை
சந்திராஷ்டமம்: ரோகினி, மிருகசீரிடம்
வளவன்

**மேஷம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும்நாள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**ரிஷபம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தேகநலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** — நட்பு வட்டம் விரிவடையும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** — சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி** — பேச்சில் கனிவு பிறக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், நண்பர்களால் நன்மையுண்டு.

**துலாம்** — செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தனவரவு திருப்திகரமாக அமையும், வாய்ப்புக்கள் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**தனுசு** — மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, இரவு-பகல் பாராது அயராது பாடுபடுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**மகரம்** — இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கும்பம்** — பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பணவரவால் சந்தோசமடைவீர்கள்.

**மீனம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் மதிப்பை உயர்த்தும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

கும்பலில் அறிவுரை ஒருபோதும் கூறாதே

# கிழக்கு முனைய விவகாரத்தை நிபுணர் குழுவே தீர்மானிக்கும்

## ரோஹித தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட இரண்டு நிபுணர் குழுக்களின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.

மக்களாணையை மீறி அரசாங்கம் ஒருபோதும் செயற்படாது என துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு அபிவிருத்தி செய்யப்படவில்லை.

2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் துறைமுகத்தில் ஒரு முனையம் மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு துறைமுகம் உட்பட பிரதான துறைமுகங்கள் குறுகிய காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டன.

நல்லாட்சி அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் வழங்க தீர்மானித்து ஆரம்பகட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்க போவதில்லை என்று நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். மக்களாணைக்கு முரணாக அரசாங்கம் ஒருபோதும் செயற்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மஞ்சளுடன் இருவர் கைது



(கொழும்பு)

தீர்வை வரி செலுத்தாது இந்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட மேலும் 847 கிலோ கிராம் மஞ்சளுடன் சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் சிலாபம் - பங்கதெனிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் வசமிருந்த 847 கிலோகிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)

# ஒருவர் கொலை

(கொழும்பு)

மத்துகம பகுதியில் உள்ள முதியோர் இல்லத்தில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

77 வயதுடைய ஒருவரே இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மத்துகம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# வாகன இலக்கத் தகடுகளில் மாற்றம்

(கொழும்பு)

வாகன இலக்கத் தகடுகளின் விநியோகத்தின் போது மாகாண குறியீட்டை நீக்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விநியோகத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வேறு மாகாணங்களில் உள்ள வாகனங்களின் உரிமையை மாற்றும்போது வாகன இலக்கத் தகடுகளை மாற்ற வேண்டியிருக்கும் என்பதனால் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு வாகன இலக்கத் தகடுகளின் விநியோகத்தின் போது மாகாணக் குறியீட்டை நீக்க வேண்டுமென்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே சமர்ப்பித்த தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு வாகனமும் பதிவு செய்யப்படும்போது ஒரு தனிப்பட்ட எண் வழங்கப்படுவதால், துறைசார் தரவுத்தளத்தின் மூலம் வாகனங்களை எளிதில் அடையாளம் காண முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய முறையின் கீழ், ஒவ்வொரு முறையும் ஒரு வாகனம் மாகாணங்களுக்கு இடையில் மாற்றப்படும் போது வாகன இலக்கத் தகடுகள் மாற்றப்பட வேண்டியதில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை ஒரு வருடத்திற்குள் மாறும்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய அரசியலமைப்பின் படி, கட்சித் தலைவர்கள் மற்றும் பிற உறுப்பினர்களின் பதவிக் காலம் ஒரு வருடத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கட்சியின் அரசியலமைப்பிலும் ஜனநாயக அமைப்பு இணைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் குறித்த அரசியலமைப்பு வரைவு நிறைவேற்றுக் குழுவால் அங்கீகரிக்கப்படும் என்றும், பதவியில் இருந்த ஒரு வருடத்திற்குள் கட்சியின் தலைமையை மாற்ற மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இங்கிலாந்தில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ்

**(லண்டன்)**
**இங்கிலாந்தில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வகை மரபணு மாற்றம் பெற்ற கொரோனா வைரஸ் தொடர்பில் அறிந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.**

எனினும் புதிய வகை கொரோனா வைரஸ் வித்தியா சமான தாக்கங்களை ஏற்படுத் தும் என்பதற்கான எந்த ஆதர வும் இல்லை என உலக சுகாதார அமைப்பின் அவசர திட்ட நிபு ணர் மைக்ரியான் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார். (நி)

# மிக விரைவில் இந்தியாவிலும் வெளிவரும் தடுப்பூசி

(டில்லி)
கொரோனாத் தடுப்பூசி இந் தியாவில் விரைவில் பயன் பாட்டுக்கு வரும் என மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரி வித்துள்ள அவர், "உடலில் எதிர்ப்பு சக்தி உருவாகும் வரை முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளை மக்கள் பின் பற்ற வேண்டும். கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் விரை வில் இந்தியாவில் கிடைக்கும். தடுப்பூசியின் இரண்டாவது டோஸ்வழங்கப்படுவதற்கும்முன் பாக தங்கள் பாதுகாப்பைக் குறை க்க வேண்டாம் என்று அனை வரையும் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கொரோனா வைரஸ் தடுப்பூசியின் பயன் பாட்டிற்கு இந்தியா தயாராகி வருவதால் மத்திய சுகாதார அமைச்சகம் அதன் செயற்பாட்டு வழிகாட்டுதல்களை மாநிலங் களுக்கு அனுப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# பனிப்பொழிவால் 40 தடவை வழுக்கி விழுந்த சிறுமி



(கிவ்)
பனிப்பொழிவால் உறைந்த தெருவைக் கடக்க முயன்ற சிறுமி 40 முறை வழுக்கி விழு ந்துள்ளார்.

உக்ரேயன் நாட்டின் பல வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கடுமையான பனிப் பொழிவு நிலவி வருகிறது. இந்த சீதோஷ்ண நிலை கார ணமாக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சாலைகள் மிகவும் வழுக்கும் தன்மையுடன் உள் ளது. இது வாகன சாரதிகளுக்கு நடை பயணம் மேற்கொள்ப வர்களுக்கும் மிகுந்த சிரம த்தை ஏற்படுத்தியுள்ளது.


இந்நிலையில், அந்நாட்டில் உள்ள ஒரு தெருவை கடக்க முயன்ற 9 வயது பள்ளிச்சிறுமி 40 முறை வழுக்கி விழுந் துள்ள சம்பவம் அங்கிருந்த சி.சி.டி.வி.கமராவில் பதிவாகி யுள்ளது.

மத்திய கிவ் பகுதியை சேர் ந்த 9 வயது பள்ளிச்சிறுமி மரியா மோசியாங்கோ நேற்று மாலை கொப்லிட் ஆண்டி ரிவ்ஸ்கை யுஸ்விஸ் தெருவில் நடந்து சென்று கொண்டிருந் தார். அவர் அடுத்த தெருவில் உள்ள தனது சகோதரனை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு செல்ல திட்டமிட்டிருந்தார்.

அதற்காக கொப்லிட் ஆண் ட்ரிவ்ஸ்கை யுஸ்விஸ் தெருவை கடக்க நடந்து சென்றுள்ளார். அப்போது கடுமையான பனி காரணமாக சாலை மற்றும் தெரு முனை பகுதிகள் மிகவும் வழுக்கும் தன்மையுடையதாக மாறியுள்ளது.

சிறுமி முதல் முறை கடக்க முயற்சித்த போது பனிப்பொழிவு காரணமாக தெருவின் தரை உறைந்து இருந்ததால் அவர் வழுக்கி கீழே விழுந்துள்ளார். உடனடியாக சுதாரித்துக் கொண்ட சிறுமி மீண்டும் எழு ந்து தெருவைக் கடக்க முயற் சித்துள்ளார். ஆனால், மீண் டும் மீண்டும் அவர் வழுக்கி விழுந்தார். சிறுமி 40 முறை கீழே வழுக்கி விழுந்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வைர லாகியுள்ளது. (நி)

# வாழ்த்துக்கள் அமெரிக்கா கொரோனா தடுப்பூசி குறித்து ட்ரம்ப் டுவிட்




(வோஷிங்டன்)
அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி போடும் பணி தொடங் கப்பட்டுள்ளது. இது குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் 'வாழ்த்துக்கள் அமெரிக்கா, உலகிற்கு வாழ்த் துக்கள்' என டுவிட்டரில் பதிவிட் டுள்ளார்.

உலக அளவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு அதிக பாதிப்புகளை சந்தித்த நாடு அமெரிக்கா. அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 3 இலட்சம் பேர் உயிரிழந்துள்ள னர்.

இதற்கிடையில், பைசர் நிறு வனத்தின் கொரோனா தடுப்பூ சியை அவசரகால தேவைக்கு பயன்படுத்த அமெரிக்க அரசு அனுமதி அளித்தது. இதைய டுத்து, அனைத்து மாகாணங் களுக்கும் கொரோனா தடுப்பூசி அனுப்பி வைக்கப்பட்டு வருகி றது.

இதனால், அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி நேற்று முதல் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

அமெரிக்காவின் முதல் கொரோனா தடுப்பூசி நியூயோர் க்கில் உள்ள வைத்தியசாலை யில் செவிலியராக பணியாற் றிவரும் சண்ட்ரா லிண்ட்செ என்ற பெண்ணுக்கு போடப் பட்டது.

இந்நிலையில், அமெரிக் காவில் கொரோனா தடுப்பூசி பயன்பாட்டிற்கு வந்துள்ளது தொடர்பாக ட்ரம்ப் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில்,

முதல் தடுப்பூசி நிர்வகிக் கப்படுகிறது. வாழ்த்துக்கள் அமெரிக்கா! உலகிற்கு வாழ்த் துக்கள்' என பதிவிட்டுள் ளார். (நி)

# பயங்கரவாத பட்டியலில் இருந்து சூடானை நீக்கியது அமெரிக்கா




(கார்ட்டூம்)
கார்ட்டூமில் உள்ள தூதரக தகவலின் படி, அமெரிக்கா பயங் கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் பட்டியலில் இருந்து சூடானை அதிகாரபூர்வமாக நீக்கியுள் ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்ப், கடந்த ஒக்டோபர் மாதம் பயங்கரவாத பட்டிய லிருந்து சூடான் நீக்கப்படுமென உறுதியளித்திருந்த நிலை யில், இந்த அறிவிப்பு வெளியா கியுள்ளது.

1998ஆம் ஆண்டில் கென்யா மற்றும் தான்சானியாவில் உள்ள அமெரிக்க தூதரகங் களில் நடந்த அல்-கொய்தா, பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 335 மில்லியன் டொலர்களை, சூடான் வழங்கினால் பயங் கரவாதத்திற்கு நிதியளிக்கும் நாடுகளின் கறுப்புப் பட்டிய லிருந்து சூடானை நீக்க முடியும் என டொனால்ட் ட்ரம்ப் அர சாங்கம் கூறியிருந்தது.

1993 இல் அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன், அரசாங்கத்தின் விருந்தினராக வாழ்ந்தபோது சூடான் பட்டிய லிடப்பட்டது. இதன் மூலம் ஈரான், வட கொரியா மற்றும் சிரியா உள்ளிட்ட அமெரிக்க கறுப்பு பட்டியலில் நான்காவது நாடாக சூடான் இணைந்தது.

2000ஆம் ஆண்டில் ஏம னில் அல்-கைதா தாக்குதலில் கொல்லப்பட்ட 17 அமெரிக்க துருப்புக்களின் உறவினர்க ளுக்கு இழப்பீடு வழங்க சூடான் முன்பு ஒப்புக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)



இந்தியாவில் முற்றிலும் கட்டப்பட்டுள்ள முதலாவது நவீன 17-ஏ ஃபிரிகேற் (17A FRIGATE) ஏவுகணை தாங்கிப் போர்க் கப்பல் இந்தியக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நவீன எஞ்சின் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் கப்பல் வான், கடல் மற்றும் ஆழ்கடலில் இருந்து வரும் முக்கோண அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் திறன் வாய்ந்த ஆயுதங்கள் மற்றும் சென்சர்களைக் கொண்டுள்ளது.

# வட இந்தியாவில் வெப்பநிலை 5° செல்சியஸ்

(டில்லி)
அடுத்த 2 அல்லது 3 தினங் களில் வட இந்தியாவில் இரவு நேர வெப்ப நிலை 5 டிகிரி செல்சியஸ் வரை குறையும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், அரியானா, சண் டிகர், ராஜஸ்தானின் வடமே ற்கு பகுதிகள் ஆகிய இடங்க ளில் குளிர் மற்றும் மிகக் கடு மையான குளிர் வெப்ப நிலை நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள் ளது. (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெற்றிலையும், காட்டுவெற்றிலையும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

வெற்றிலை
Botanical Name:
Piper betle
Family :- Piperaceae
Engl :- Betel
Sinh :- Bulath

காட்டு வெற்றிலை
Botanical Name:
Carmoma microphylla
Family :- Boragi naceae
Engl :- Ceylon boxwood
Sinh :- Hintambala

வெற்றிலை இலையின் நிறத்தாலும், மணத்தாலும் கார்ப்புச் சுவையாலும் மூவகைப்படும் மிகுந்த மணமும், காரம், கறுப்புநிறமில்லாதது. வெற்றிலை கருமையும், காரமும் மிகுந்தது, கம்மா று வெற்றிலை கற்பூரமணமும் , சிறு காரமுமுடையது கற்பூர வெற்றிலை.

இவற்றைவிட வெற்றிலையில் வெள்ளிலை என்றொரு வேறு ஓர் இனமும் நாகவல்லி என்றொரு இனமும் உண்டு. அவற்றின் மருத்துவக்குணங்கள் வெற்றிலையில் இருந்து சற்று வேறுபட்டவையாகும்.

இவற்றுள் வெற்றிலையும், கம்மாறு வெற்றிலையும் பொதுவாக மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

**"ஐயம் அறுங்காண் அதன்சாரங் கொண்டக்காற்**
**பையச் சயித்தியம் போம் பைற்தொடியே- மெய்யின்**
**கடியின் குணம் போகுங் கார வெற்றிலைக்குப்**
**படியுமுத் தோடமிதைப் பார்."**

வெற்றிலையின் இரசத்தைப் பருகில், கபம் பைத்தியம் ரோகங்கள், காணாக்கடி, முப்பிணிகள் தீரும் (வாத, பித்த, கப நோய்கள்)

**கம்மாறு வெற்றிலை.**

**எட்டிலொன்று கிட்டினீ ரேற்றஞ் சிரோபார**
**மாட்டி விடுசன்னி மாந்த மொடு - நாட்டிற்**
**பரிய குரற் கம்மல்வலி பண்டியுப்பி சம்போ**
**மரியகம் மாறு வெற் றிலை.**

இதற்கு நீரேற்றம், தலைப் பாரம், முப்பிணி, மாந்தம், குரற் கம்மல், வயிற்றுவலி, வயிற்றுப்பிசம் ஆகியவை போம்.

சித்தமருத்துவ நூல்கள் காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகள் மட்டும் தாம்பூலம் தரிக்க வேண்டும் என்று எடுத்துக்கூறியுள்ளன. பெரும்பாலும் ஆகாரத்தின் பின்னர் வெற்றிலை சாப்பிடும் பழக்கம் காணப்படுகின்றது. வாய்துர்நாற்றம், அழுக்கு முதலியவைகளை நீக்குவதுடன் சாப்பாட்டின் பின் இரைப்பையில் அமிலத் தன்மை அதிகரிப்பதையும் இது கட்டுப் படுத்துகிறது. வெற்றிலையை வாயுள் வைத்து நன்கு சப்பும் போது கூடுதலாக உமிழ்நீர் சுரக்கின்றது. இது காரத்தன்மை யானது.

வெற்றிலை உண்பது பற்றி இருபாலைச் செட்டியார் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்.



வெற்றிலை



காட்டு வெற்றிலை

**வெற்றிலை துவர்காயுண் ணும் விதங்கேளு நாடாறுந் தான்**
**பெற்றிடு காலை யுச்சி பேசிய மாலை யென்றே**
**உற்ற முக்கால முன்பா யொழிவிலாய் புளித்த வேப்பம்**
**பற்றிரு கிருமி சேடம் பல் வல் தானுமின்றாம்.**
**பேதியா நாவரட்சி பெருகிய வரோசி சோம்பல்**
**காதிடு மகிழ்ச்சியோடு கருதிய வழகுண்டாகும்.**
**சாதிக்காய் கூடனேலஞ் சார்வசு வாசியோடு**
**தீதகல் கராம்பு கூட்டித் தின்னவுத்தம மான்றே.**

அதாவது வெற்றிலையை காலை, மதியம், மாலை என்ற மூன்று பொழுதும் சாதிக்காய், பச்சைக்கற்பூரம், ஏலம், வசுவாசி, கராம்பு, பாக்கு என்பன கூட்டியுண்ண புளித்தவேப்பம், கிருமி, பல்வலி, நாவறட்சி, சுவையின்மை, சோம்பல் முதலியன நீங்கும்.

வெற்றிலையானது துவர்ப்பு, கார்ப்பு, இனிப்புச் சுவையுடையது. இது வாத, கப நோய்களை கட்டுப்படுத்தக் கூடியது. உடலுக்கு பலத்தைக் கொடுக்க வல்லது. இருதய நோய்கள் சிலவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது. Digitalis (நரிப்புகையிலை) எனும் மூலிகையிலும் பார்க்க கூடுதலாக செயலாற்றலுள்ளது.

எனவே வெற்றிலையை உரிய முறையில உண்டால் தீங்கு ஏற்படமாட்டது. ஆனால் அவ்விதம் கடைப்பிடிப்பதில் சோம்பல் உள்ளவர்கள் அதன் பாவனையை கைவிடுவதே அவர்களின் ஆரோக்கியத்திற்கு நன்று. வெற்றிலையை முறைதவறி உண்டால் பல்வேர் சிதையும், கண்புகைச்சல், பாண்டு (இரத்தச்சோகை) மற்றும் பல நோய்கள் உண்டாகும். அதற்கு மாற்று மருந்துகள் இல்லை.

எனவே வாய்ப்புற்றுநோயும், அதனால் ஏற்படும் உபத்திரவங்களான இரத்தச் சோகை, உடற்பலவீனம், பற்கள் விழுதல் என்பன பற்றி சித்தமருத்துவ நூல்கள் எச்சரித்திருக்கின்றன.

**மருத்துவப் பயன்கள்.**

150 மில்லி தேங்காய் எண்ணெயை ஒரு சிறிய சட்டியில் விட்டு 5 வெற்றிலையை அதில் கிள்ளிப்போட்டு அடுப்பில் வைத்து இலை முழுவதும் சிவக்கும் வரை காயவைத்து இறக்கி அதை ஒரு சீசாவில் விட்டு வைத்து காலை, மாலை பாதித்த இடத்தை சுத்தம் செய்து இந்த எண்ணெயைத் தடவி வந்தால் பற்று, படை, சொறி, சிரங்கு இவைகள் குணமாகும்.

தலைவலி நீங்க வெற்றிலையைக் கசக்கிச் சாறு எடுத்து அந்தச் சாற்றில் சிறிதளவு எடுத்து அதில் சிறிதளவு கற்பூரத்தை சேர்த்து குழப்பி வலியுள்ள இடத்தில் தடவினால் தலைவலி உடனே குணமாகும். வெற்றிலையை தேவையான அளவு எடுத்து அதன் மேல் வேப்பெண்ணெயைத் தடவி தணலில் வாட்டி வீக்கமுள்ள இடத்தில் வைத்துக் கட்டினால் வீக்கம் வாடும்.

இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் ஒன்பது மிளகை மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்கினால் தேள்விடம் நீங்கும்.

வெற்றிலைச்சாறு - 200 மில்லி, குப்பைமேனிச்சாறு - 200 மில்லி, நொச்சியிலைச் சாறு - 200 மில்லி, வேப் பெண்ணெய் - 400 மில்லி

மிளகு, சுக்கு, வாய்விடங்கம் ஒவ்வொன்றும் 35 கிராம் வீதம் எடுத்து வெற்றிலைச்சாறு சிறிது விட்டு கலக்கமாக அரைத்து வாணலியில் கற்கம், சாறுகள், வேப்பெண்ணெய் எல்லாம் ஒன்றாக கலந்து அடுப்பேற்றி மருந்து சிவந்துவரும் சமயம் கீழே இறக்கி வைத்து ஆறிய பின் எண்ணெயை மட்டும் வடித்து ஒரு சீசாவில் விட்டு வைத்துக் கொண்டு வாராவாரம் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் பீனிசம், மண்டைக்குத்து குணமாகும்.

வெற்றிலைச்சாறு 10 மில்லி அளவு காய்ச்சிய பசும்பால் ஒரு டம்ளரில் கலந்து சிறிதளவு சீனியும் சேர்த்து அருந்த சிறுநீர் நன்கு வெளிப்படும். வெற்றிலைச்சாறு ஒரு தேக்கரண்டி, தேன் ஒரு தேக்கரண்டியுடன் கலந்து அருந்த உடற்பலத்தை உண்டாக்கும். இவ்வாறு இரு நாட்களுக்கு ஒரு தடவை 40 நாட்கள் எடுக்கலாம்.

வெற்றிலையில் சாறு எடுத்து அதில் 3 தேக்கரண்டியளவும், இஞ்சிச்சாறு 3 தேக்கரண்டியளவும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் விட்டு வைத்தால் அது தெளியும். அடியில் சுண்ணாம்பு நீர் தேங்கியிருக்கும். சாற்றை மட்டும் இறுத்து கொடுக்க வேண்டும். காலை, மாலையாக இருவேளை கொடுத்து வந்தால் நெஞ்சுச்சளி, தடிமன் குணமாகும்.

வெற்றிலைச்சாறு 60 மில்லி, 3 மிளகு, 2 கிராம் சுக்கு இவைகளுடன் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து காலை, மாலை 7 நாட்களுக்கு கொடுக்க ஆஸ்துமா, வெளிமூச்சுக்கஷ்டம் குறையும்.

வெற்றிலையும், துளசி இலைகளையும் சம அளவு எடுத்து கசக்கிச் சாறுபிழிந்து ஒரு தேக்கரண்டி அளவு சாற்றில் தேன் அதேயளவு கலந்து கொடுக்க குழந்தைகட்கு உண்டாகும் வயிற்றுப்பிசம், சளி நீங்கும்.

வெற்றிலையை தணலில் வாட்டி மார்பின் மேல் வைத்து கட்டி வந்தால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

வெற்றிலைச்சாறு 10 துளி ஒரு சங்களவு வெந்நீர் விட்டு கலக்கி குழந்தைகட்கு கொடுத்தால் சளியுடன் கூடிய காய்ச்சல் தணியும்.

வெற்றிலையுடன் ஓமத்தை சேர்த்து இடித்து தேன்கலந்து சாப்பிட்டால் வயிற்றுப்பிசம், வயிற்றுப்போக்கு இரண்டும் குணமாகும்.

வெற்றிலையுடன் ஓமத்தை சேர்த்து இடித்து தேன்கலந்து சாப்பிட்டால் வயிற்றுப்பிசம், வயிற்றுப்போக்கு இரண்டும் குணமாகும்.

வெற்றிலை, மிளகு மற்றும் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் தொண்டைப் புண், இருமல் குணமாகும்.

**காட்டு வெற்றிலை**

இது வெற்றிலையை விடக் காரம் குறைவானது. இதன் இலைகள், வேர்கள் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை.

இதுவும் பெருஞ்செடியாகும். சிறிய தனியிலைகள் வெள்ளை நிற, ஒழுங்கான பூக்கள் ஒருவிதையையுடைய பழங்கள்.

மாசி, ஆனி தொடக்கம் ஆவணி காலப்பகுதியில் பூக்கும் புதர்க்காடுகளில் பரம்பல் அதிகமாகக் காணப்படும்.

இதனுடைய பட்டையில் Glucoside இனத்தைச் சேர்ந்த வேதியற் பொருள் காணப்படும்.

இதனுடைய வேருக்கு நச்சி நீக்கி (Anti dote) செய்கை உண்டு. ஏதாவது விஷங்கள் தீண்டினால் இதன் வேர்களை சேகரித்து நன்கு கழுவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை விஷக்குறி, குணங்கள் குறையும் மட்டும் பயன்படுத்தலாம்.

இதன் இலைகளை சேகரித்து வழமைபோல் குடிநீர் காய்ச்சி 60 மில்லி காலை, மாலை 11 நாட்கள் குடித்துவர கழிச்சல், இருமல் குணமாகும்.

காட்டுவெற்றிலை இலைகள், மிளகு, வேர்க்கொம்பு எல்லாம் ஒரேயளவாக எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 60 மில்லி காலை, மாலை 5 நாட்கள் எடுக்க நாட்பட்ட இருமல், ஆஸ்துமா குணமாகும்.

காட்டுவெற்றிலை இலைகளைமிளகுடன்சேர்த்துமென்று சாற்றைவிழுங்கினால் தொண்டைப்புண், வறட்டு இருமல், விஷக்குறி குணங்கள் நீங்கும். விஷக்கடிக்கு வெற்றிலையை விட காட்டு வெற்றிலையே சிறந்த மூலிகையாகும்.

# நல்லாட்சியில் மக்கள் இழந்தவற்றை நாம் மீண்டும் பெற்றுக் கொடுப்போம்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தினால் இழக்கப்பட்டவற்றை மீண்டும் நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதாக, அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிக்கின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நல்லாட்சி அரசாங்கத்தினால் நாட்டிற்கு இழக்கப்பட்டவற்றை மீண்டும் நாங்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இழந்த உயிர்களை மீண்டும் பெறமுடியாது. இருப்பினும் ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை வழங்க முடியும்.

மாகாண சபை முறைமையில் பிரச்சினைகள் இருக்கலாம்.

அதற்கு புதிய அரசியலமைப்பில் தீர்வும் காண முடியும் என்கிற போதிலும் தேர்தல் இல்லாமையே இன்று பிரச்சினை.

தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். நல்லாட்சி இல்லாதொழித்தவற்றை மக்களுக்கு வழங்க வேண்டும்.

அந்தசபைகளில் மக்களின் பிரதிநிதிகள் இல்லை. அவற்றுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதிக்கு என்ன நடக்கின்றது என்பதை வினவ தேர்தல் அவசியம்" என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)

# சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு அரசு கண்டு கொள்ளவில்லை

(கொழும்பு)

நாட்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு நாளாந்தம் மூன்று ஏக்கர் காடுகள் அகற்றப்படும் அளவுக்கு அதிகரித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மகியங்கனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.தே.கவின் கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த நிலங்கள் அகற்றப்பட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

குறிப்பாக மஹா ஓயாவில் சமீபத்தில் 600 ஏக்கர் காடு அகற்றப்பட்டு அவை பன்னாட்டு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட உள்ளது என்றும் ருவான் விஜேவர்த்தன குறிப்பிட்டார்.



இதுபோன்ற செயல்களால் தற்போதைய அரசாங்கம் பின்னடைவைச் சந்தித்துள்ளது என குறிப்பிட்டுள்ள ருவான் விஜேவர்த்தன, விரைவில் ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியல் சக்தியாக மாறும் என்றும் தெரிவித்துள்ளார். (நி-7)

# காரில் கஞ்சா நால்வர் கைது

(கொழும்பு)

கார் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட 6.5 கிலோ கிராம் கஞ்சா கல்பிட்டி, பாலாவி வீதியில் கரம்பை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் கடற்படை சோதனை சாவடியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்தில் மூவர் பயணித்துள்ளனர். அவர்களில் ஒருவர் தப்பி ஓட முயற்சித்த போது கடற்படை வீரர்களினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அந்த வாகனத்திலிருந்த சுமார் ஒரு இலட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மூலம் கற்பிட்டியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றிலிருந்த மேலும் 20 கிலோ கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன. ஹோட்டலின் கூரைப்பகுதி மற்றும் கட்டிலில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

ஹோட்டலிலிருந்த ஒரு பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2183

வாகீஸ்




யாதவி




துர்ஷா




தீசன்




நகுல்




விதுனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கைதிகளை காணொளி மூலம் சந்திக்கலாம்

(கொழும்பு)

சிறைச்சாலை கைதிகள், தமது உறவினர்களை காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக சந்திப்பதற்கு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளதாவது,

"அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலையில் இருந்தே இதன் முதலாவது செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் உறவினர்கள் வெளிநாடுகளில் இருந்தால்கூட, அவர்களுடன் காணொளி தொழில்நுட்பத்தினூடாக உரையாடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கைதிகள், தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளுக்கு தெரியப்படுத்தி தங்களுக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும். (ஐ)

# பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்திற்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)



பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவராக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்றியத்தின் பிரதித் தலைவர்களாக திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற போதே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரள, ஹரிணி அமரசூரிய, டயனா கமகே, கோகிலா குணவர்த்தன, மஞ்சுளா திஸாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# ஆயுர்வேத மருந்து விஷமாக மாறக்கூடும்

## வெண்டோல் லங்கா தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

கொவிட்-19 நோய்க்கான உள்ளூர் ஆயுர்வேத மருந்து உற்பத்தியானது, தம்மிக்க பண்டார என்ற தனிநபரால் தயாரிக்கப்பட்டதாக கூறுவது மோசடியானதென ஆயுர்வேத மருத்துவரும் வெண்டோல் லங்கா நிறுவனத்தின் தலைவருமான லெல்வெல ஜி கோட கந்த தெரிவித்துள்ளார்.

ஊடக நிகழ்வொன்றுக்கு மேற்படி கருத்து வெளியிட்டிருந்த ஆயுர்வேத மருத்துவரும் தொழில்துறை உரிமையாளருமான லெல்வெல ஜி கோடகந்த, தற்போது மருந்தாக கருதப்படும் குறித்த பாணியில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் விஷமாக மாறக் கூடுமென தெரிவித்துள்ளார்.

தற்போது இம்மருந்தை பயன்படுத்திய அனைவரின் உடலிலும் நச்சுக்கள் பரவியிருக்குமெனவும் அவற்றை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தவறான மருந்துக்கு அமைச்சரும் ஆயுர்வேத ஆணையாளரும் பொறுப்பு என்று குற்றம் சாட்டியுள்ளதுடன் மேலும் இம்முழு செயன்முறையும் ஒரு முழுமையான ஊடக நிகழ்ச்சி என்றும் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 இலிருந்து தங்களைக் காப்பாற்றுவதற்காக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி மற்றும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன உட்பட பல எம்.பி.க்கள் பகிரங்கமாக இந்த மருந்தை அருந்தியிருந்தனர்.

அத்துடன் குறித்த மருந்தை சுகாதார அமைச்சு அங்கீகரிக்கவில்லையெனவும் ஆயுர்வேத திணைக்களத்தால் பதிவு செய்யப்படவில்லையெனவும் ஆயுர்வேத ஆணையாளர் ஏற்கனவே அறிவித்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பணியில் நேர்மை

ஒருத்தர் ஓடி வந்தார். இன்னொருத்தரைப் பார்த்து, சேர், உங்கள் சைக்கிளை ஒரு நாள் இரவல் கொடுங்களேன். பக்கத்து ஊருக்குப் போய்விட்டு வர வேண்டியிருக்கு என்றார்.

இவர் சைக்கிளைக் கொடுத்து பத்திரமாக கொண்டு போங்க என்றார். சேர்... இதை பத்திரமாக கொண்டு போகின்றேன். கவலையே வேண்டாம். ஏன் என்றால் இது உங்களுடைய சைக்கிளா நான் நினைக்கவில்லை. என்னுடைய சைக்கிளாக நினைக்கின்றேன் என்றார். .

அதற்குப் பின்பு தான் இவருக்கு உண்மையாகவே பயம் வந்தது. ஏன் என்றால் அவர்...சொன்னது மாதிரி அதை தன்னுடைய சைக்கிளாகவே நினைத்து தள்ளிக்கொண்டு போய் விட்டால் என்ன செய்வது? எது எதை நம்முடையதாக நினைப்பது என்பதற்கு ஒரு வரையறை இருக்கின்றது.

சில பேர் அலுவலகத்தையே வீடாக நினைத்துவிடுவது உண்டு. அப்படிப்பட்டவர்கள் கூட வீட்டை அலுவலகமாக நினைப்பதில்லை. ஏன் என்றால் வீட்டிலே இவர் அலுவலராக நடந்து கொள்ள முடிவதில்லை. இது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்பொழுது விடயத்திற்கு வருவோம்.

பொறியியல் மேதை டாக்டர் விசுவேசுவரய்யா இருந்தார் இல்லையா? பாரத ரத்னா விருது எல்லாம் கொடுத்தார்களே. அலுவலக வேலை, வேறு சொந்த வேலை வேறு என்பதற்கு ஒரு உதாரணமாக இருந்தவர் அவர்.

மைசூர் மகாராஜாவிடம் திவானா இருந்தார். அவர் ஒரு நாள் அரசாங்க வேலை காரணமாக வெளியூர் போயிருந்தார். ஹாசன் என்கின்ற ஊருக்குப் பக்கத்திலே ஒரு பயண மாளிகை அங்கே தங்கிக் கொண்டார். ராத்திரி அங்கே தங்கியிருந்துவிட்டு விடிந்ததும் ஊருக்குத் திரும்புவதாக திட்டம். ராத்திரி தூங்குவதற்கு ரொம்ப நேரம் ஆகிவிட்டது. அதிக நேரம் வரைக்கும் அரசாங்கம சம்பந்தப்பட்ட வேலைகளையே பார்த்துக் கொண்டிருந்தார். அரசாங்க பைல்கள் நிறைய இருந்தது. அதையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்தார். படித்துப் பார்த்தார். பரிசீலனை செய்தார். அது அதிலே எழுத வேண்டியதை எழுதினார். கையெழுத்துப் போட்டார். ஒரு வழியாக அந்த வேலையெல்லாம் முடிந்தது. அதன்பின்பு என்ன எண்ணினார் என்றால்.

தன்னுடைய சூட்கேஸைத் திறந்தார். அதிலேயிருந்து இரண்டு மெழுகுவர்த்தியை எடுத்துக் கொளுத்தி வைத்தார். அந்த பயண மாளிகையிலே அதுவரைக்கும் எரிந்து கொண் டிருந்த மின்சார விளக்குகளை அணைத்துவிட் டார். அதற்குப் பின்பு அந்த மெழுகுவர்த்தி வெளிச்சத்திற்கே சில புத்தகங்களை தொடர்ந்து படிக்க ஆரம்பித்துவிட்டார். அந்த பயண மாளிகையிலே பணியாளராக இருந்தவர் இதைப் பார்த்துவிட்டு ஓடி வந்தார். மறுபடியும் மின்விளக்கைப் போடுவதற்காகப் போனார். விசுவரய்யா அதைப் பார்த்துவிட்டு போட வேண்டாம் என்று விட்டார். இதுவரைக்கும் நான் அரசாங்க அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அதனால் மின் விளக்குகள் அப்பொழுது எரிந்ததில் தப்பில்லை. இப்பொ ழுது நான் புத்தகம் படித்துக் கொண்டிருக்கின்றேன். இது என் சொந்த வேலை. இங்கேயிருக்கின்ற மின் விளக்கு அதற்காக ஏன் எரிய வேண்டும்? என்று கேட்டாராம். இப்பொழுது இருக் கின்ற நில அரசுப் பணியாளர்களிடம் இந்த சம்பவத்தை பேச்சோடு பேச்சாக சொல்லிப் பார்த்தேன். அவர்களாலே இதை ஜீரணிக்கவே முடியவில்லை.

நேர்மை தேவை தான்.. அதற்காக அவ்வளவு தூரத்துக்கு அது தேவையா ? என்று தோன்றுகின்றது. அவர்களுக்கு. விசுவேசுவரய்யா அப்படி செய்தது... தான் ஒரு நேர்மையாளர் என்று இந்த உலகத்திற்கு நிரூபிக்க வேண்டும் என்கின்றதற்காக இல்லை.. தான் அப்படி நடந்து காட்டினால் தன்னை சுத்தியிருக்கின்றவர்களும்.. அதை கேள்விப்படுகின்றவர்களும் முடிந்த அளவுக்கு பொது வாழ்விலே அரசுப் பணியிலே நேர்மையைக் கடைப்பிடிக்க முயற்சி செய்யலாம் என்பதற்காகத் தான். இப்பொழுதும் சில பேர் இருக்கின்றார்கள். இவர்கள் அலுவலகம் வேறு வீடு, வேறு என்று நினைப்பதில்லை. அவ்வளவு உரிமை. ஒருத்தர் அப்படித்தான். அவருக்கு அவசரமாக 5000 ரூபா தேவைப்பட்டது. அலுவலகத்து பணத்தை எடுத்துக் கொண்டார். அந்த நேரம் பார்த்து ஓடிட் வந்து விட்டது. மாட்டிக்கொண்டார். விசாரணை நடக்கின்றது.

அவர் சொல்கின்றார். சேர் நான் நேரம் காலம் பார்க்காமல் அலுவலகத்திலே வேலை செய்வேன். ஏன் என்றால் அதை என்னுடைய அலுவலகமாக நினைக்கின்றேன். அவசரத்திற்கு அந்த பணத்தை எடுத்தேன். மறுபடி வைத்துவிடலாம் என்று தான் இருந்தேன். அதற்குள் இப்படி ஆகிவிட்டது. நீங்கள் என்ன நினைத்தாலும் சரி... நான் அலுவலகம் வேறு வீடு வேறு என்று நினைக்கவில்லை..அது என்னுடைய சுபாவம் என்றார். விசாரணை செய்தவர் தீர்ப்பு வழங்கினார்.


உங்கள் சுபாவத்துக்கு மதிப்பு கொடுத்து நானும் தீர்ப்பு வழங்குகின்றேன். நீங்கள் கொஞ்ச நாள் ஜெயிலில் இருந்து விட்டு வாங்க. அது உங்களுக்கு கஷ்டமாக இருக்காது என்று நினைக்கின்றேன்.. ஏன் என்றால் அங்கே.. போனாலும் நீங்கள்– உங்கள் சுபாவப்படி–வீடு வேறு ஜெயில் வேறு என்று நினைக்க மாட்ள்கள் என்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

**20**


## கலாநிதி க.தவலிங்கம்

**ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.**

நிலையியற் கட்டளைகள் குழு, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, பொது மனுக் குழு, சிறப்புரிமைகள் மற்றும் உயர் பதவிகள் பற்றிய குழு போன்றவற்றின் அலுவல்களை நடத்துவதற்கான வழிகாட்டல்களை நிலையியற் கட்டளைகள் கொண்டுள்ளன.

தேவையானபொழுது பிரேரணையொன்றின் மூலம் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி வைக்கும் அதிகாரம் சபைக்கு உண்டு. சபையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நிலையியற் கட்டளைகளில் எதுவும் குறிப்பிடப்படாதவிடத்து, அவ்விதமான விடயங்களைச் சீராக்குவதற்குரிய எஞ்சிய அதிகாரம் சபாநாயகருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**தேவையானபொழுது பிரேரணையொன்றின் மூலம் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி வைக்கும் அதிகாரம் சபைக்கு உண்டு. சபையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்க்ள் தொடர்பாக நிலையியற் கட்டளைகளில் எதுவும் குறிப்பிடப்படாதவிடத்து, அவ்விதமான விடயங்களைச் சீராக்குவதற்குரிய எஞ்சிய அதிகாரம் சபாநாயகருக்கு அளிக்கப்பட்டுள்ளது.**

**முழுப் பாராளுமன்றக் குழு, தெரிகுழுக்கள் (Select Committees), ஆலோசனைக் குழுக்கள் மற்றும் சிறப்பு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட சபைக் குழு, தெரிவுக் குழுக்கள் (Committees on Selection), நிலையியற் கட்டளைகள் குழு, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, பொது மனுக்குழு, சிறப்புரிமைகள் மற்றும் உயர் பதவிகள் பற்றிய குழு போன்றவற்றின் அலுவல்களை நடத்துவதற்கான வழிகாட்டல்களை நிலையியற் கட்டளைகள் கொண்டுள்ளன.**

### பாராளுமன்றத்தின் சட்டவாக்க் அதிகாரம்

1978 அரசியலமைப்பு வழங்கும் அதிகாரங்கள்

**உறுப்புரை 4 (அ).** மக்களது சட்டமாக்கற்றத்துவம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 75.** கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன் கொண்ட சட்டங்களை (அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்கும் அல்லது திருத்தும் அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் புதிய ஏற்பாட்டைச் சேர்க்கும் சட்டங்கள் உட்பட சட்டங்களை) ஆக்குவதற்குப் பாராளுமன்றம் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 76.** அரசியலமைப்பின் 76(2)(3) மற்றும் (4)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமையப் பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற்றத்துவத்தைத் துறத்தலோ, எவ்விதத்திலும் பராதீனப்படுத்துதலோ ஆகாது என்பதுடன், ஏதேனும் சட்டமாக்கற்றத்துவம் கொண்ட ஏதேனும் அதிகாரத்தை நிறுவுதலுமாகாது.

**உறுப்புரை152.** நிலையியற் கட்டளை 133 - திரட்டு நிதியத்தை அல்லது குடியரசின் வேறு நிதியங்களைக் கையாளுவதற்கு அல்லது அந்த நிதியங்கள் மீது பொறுப்புக்களைச் சுமத்துவதற்கு அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கு அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் வரியை நீக்குவதற்கு, கூட்டுவதற்கு அல்லது குறைப்பதற்கு அதிகாரமளிக்கும் சட்டமூலம் அல்லது பிரேரணை எதுவும் அமைச்சரொருவரால் மட்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**சட்டவாக்க மொழி**

**உறுப்புரை 23.** எல்லாச் சட்டங்களும் துணைநிலைச் சட்டவாக்கங்களும் சிங்களத்திலும் தமிழிலும் சட்டமாக்கப்படுதலும் அல்லது இயற்றப்படுதலும் வெளியிடப்படுதலும் வேண்டும் அவை ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**அரசியலமைப்பு உறுப்புரை 23.** எல்லாச் சட்டங்களும் துணைநிலைச் சட்டவாக்கங்களும் சிங்களத்திலும் தமிழிலும் சட்டமாக்கப்படுதலும் அல்லது இயற்றப்படுதலும் வெளியிடப்படுதலும் வேண்டும். அவை ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### உயர்நீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கம்

**அரசியலமைப்பு உறுப்புரை118.** இலங்கைக் குடியரசின் உயர்நீதிமன்றமானது, குடியரசிலுள்ள மிக மேலானதும் முடிவானதுமான மேனிலைப் பதிவேட்டு நீதிமன்றமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் விடயத்தில் நியாயாதிக்கம் பிரயோகித்தலும் வேண்டும். அதாவது - (அ) அரசியலமைப்புக் கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கம்.

**அரசியலமைப்பு உறுப்புரை120.** அரசியலமைப்பின் உறுப்புரைகள் 82, 83 மற்றும் 84 இன் கீழான ஏதேனும் சட்டமூலம் அல்லது அதன்கண் உள்ள ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புக்கு ஒவ்வாததாக உள்ளதா? எனும் கேள்வி எதனையும் தீர்மானிப்பதற்குத் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு இருத்தல் வேண்டும்.

**அரசியலமைப்பு உறுப்புரை121.** உறுப்புரை 120 இன் கீழ் ஒரு சட்டமூலத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஒரு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும்போது, உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும் வரைக்கும் அச்சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படலாகாது.

**அரசியலமைப்பு உறுப்புரை123.** சட்டமூலமானது, அரசியலமைப்பின் 82, 83 மற்றும் 84 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இயைந்து போகின்றதா? என்றும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு ஒவ்வாததாகவுள்ளதா? என்பது பற்றியும் உயர்நீதிமன்றம் அதனது தீர்மானத்தில் கூறுதல் வேண்டும்.

**அரசியலமைப்பு உறுப்புரை124.** அரசியலமைப்பின் 120 மற்றும் 121 ஆம் உறுப்புரைகளுக்கமைய, இவ்வாறான சட்டமூலத்தின் அரசியல் அமைப்புக்கு அமைந்து போகும் தன்மை குறித்து விசாரிப்பதற்கு வேறு எந்த நீதிமன்றத்திற்கோ அல்லது வேறு ஏதும் நிறுவனத்திற்கோ அதிகாரம் கிடையாது.

**அரசியலமைப்பு உறுப்புரை125.** உயர்நீதிமன்றமானது, அரசியலமைப்பின் பொருள் கோடல் பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்வதற்கும் அது பற்றித் தீர்மானிப்பதற்கும் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

### சட்டமூலம் தொடர்பாக சட்டமா அதிபரின் கடமைகள்

**அரசியலமைப்பு உறுப்புரை 77.** 82 ஆம் உறுப்புரையின் (1)ஆம், (2) ஆம் பந்திகளின் தேவைப்பாடுகள் எவையேனும் மீறப்பட்டுள்ளதா? என்றும் விசேட பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட வேண்டுமா? என்றும் ஒவ்வொரு சட்டமூலத்தையும் சட்டமா அதிபர் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். குழுநிலையின் இறுதியில் சட்டமூலமொன்றில் திருத்தம் செய்யுமாறு முன்மொழியப்படும் சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் தம் கருத்தைச் சபாநாயகருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

**நிலையியற் கட்டளை 43(3) -** ஒரு சட்டமூலத்துக்கு முன்மொழியப்படும் ஒவ்வொரு திருத்தமும் அரசியலமைப்பின் 77 ஆம் உறுப்புரைக்கமைய சட்டமா அதிபரால் ஆராயப்படல் வேண்டும்.

### பாராளுமன்றத்தில் சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடைமுறை

**நிலையியற் கட்டளை 50.**

(1)அரசியலைமப்பின் 78 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கமைய, எவரேனும் அமைச்சரவையின் அமைச்சர் முன்னறிவித்தலின் பின்னர், சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் கட்டளையின்றி, அதனைச் சமர்ப்பிக்கலாம். பொதுவாக ஆரம்பத்தில் சட்டமூலமொன்று அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் போது, சட்டமூலத்தின் தலைப்பு, செயலாளர்நாயகத்தினால் வாசிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சட்டமூலமானது அப்போது முதலாவது முறையாக மதிப்பிடப்பட்டுள்ளதென்றும் கருதப்பட்டு, அச்சிடப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதென்றும் கருதப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முற்படாத ஒரு திகதியன்று இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(2) முதலாம் மதிப்பீட்டின் பின்னர் அத்தகைய சட்டமூலம் பிரேரணை எதுவுமின்றி உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். குழுவானது சட்டமூலத்திற்குத் திருத்தங்களைப் பரிந்துரைக்கலாம். குழுவானது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் வரை அல்லது பாராளுமன்றத்தினால் அறிக்கையிடுவதற்காக வழங்கப்பட்ட காலம் முடியும் வரை சட்டமூலம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

### அரசியலைமப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் III இல் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலான சட்டமூலங்கள்

**நிலையியற் கட்டளை 51.**

• (1) அரசியலைமப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் III இல் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் சம்பந்தமான ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது, பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, இந்நிலையியற் கட்டளையின் 2 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) அச்சட்டமூலம் தொடர்பான ஒவ்வொரு மாகாண சபையினதும் கருத்துக்கைள, அச்சட்டமூலத்தின் பிரதிகள் ஒவ்வொரு மாகாண சபைக்கும் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து இரு மாத காலப்பகுதியினுள் அல்லது பாராளுமன்றம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு காலப்பகுதியினுள், பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அச்சட்டமூலத்தின் பிரதிகளை சகல மாகாண சபைகளிற்கும் அனுப்பிவைக்குமாறு சபாநாயகர் செயலாளர் நாயகத்தைப் பணித்தல் வேண்டும்.

(ஆ) உபபந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவுறுவதன் மேல் அல்லது மாகாண சபைகளின் கருத்துக்கள் பெறப்பட்டதன்மேல், இவற்றுள் எது முந்தியதோ அதன் மேல், பாராளுமன்றமானது அச்சட்டமூலம் சம்பந்தமாக நடவடிக்கையெடுக்க முற்படலாம்.

(தொடரும்...)


## மஹ்ரூப் கைது

(கொழும்பு)

றிசாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல் லாஹ் மஹ்ரூப் நேற்று அதிகாலை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோதமாக சதொச வாகனத்தை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். (ஐ)

## விசித்திரமான கோழி முட்டை



(கொழும்பு)


பலாங்கொடை நகரத்தில் உள்ள கடை ஒன்றில் விசித்திரமான கோழி முட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுரக்காய் வடிவத்தில் இந்த முட்டை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலாங்கொடை நகரில் வாராந்த சந்தைக்கு அருகில் முட்டை விற்பனை செய்த நபர் ஒருவரிடமே இந்த முட்டை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சாதாரணமான முட்டை கோள வடிவமுடையது. ஆனால் இம் முட்டையோ ஊதிய பலூன் போன்ற வடிவத்தில் இருப்பதால் இந்த முட்டையின் புகைப் படங்கள் இணையத்தில் பலராலும் பகிரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## நன்றியை காட்டும் நைவேத்தியம்

(தொடர்ச்சி)

திருவாதிரை தினத்தன்று களி மற்றும் 7 வகை காய்கறி கூட்டுத்தயாரித்து நடராஜருக்கு நைவேத்தியம் செய்தால் இன்பம் பெருகும் என்பார்கள்.

சிவாலயங்களில் உள்ள வைரவருக்கும் விதம் விதமான நிவேதனம் செய்யலாம். தேய்பிறை அஷ்டமி தினத்தன்று வெல்லம் கலந்த பாயாசம், உழுந்து, வடை, பால், தேன் ஆகியவற்றை நிவேதனம் செய்தால் வைரவர் அருளால் தொழில் விருத்தி அடையும். குடும்பத்தில் செல்வம் உருவாகும் என்பது ஐதீகம். தல விருட்சங்களின் கீழ் உள்ள நாகர் சிலைகளுக்கு பால் அபிஷேகம் செய்து, பால் நைவேத்தியம் படைத்தால் உடனே திருமணம் கைகூடும் என்பார்கள்.

பெரும்பாலும் தலங்களுக்கு ஏற்ப நைவேத்தியம் மாறுபட்டதாக இருக்கும். குற்றாலம் நாதர் எப்போதும் தண்ணீருக்கு அருகில் இருப்பதால் அவருக்கு ஜலதோசம் பிடித்துவிடக்கூடாது என்று சுக்கு காபி நிவேதனம் செய்வார்கள். திருவாரூர் தியாகராஜ பெருமானுக்கு தினமும் அர்த்தஜாம பூஜையின் போது தேன் குழல், நெய் முறுக்கு செய்து வைத்து நைவேத்தியம் செய்வார்கள்.

வைணவத் தலங்களிலும் ஆலய தல புராணத்துக்கு ஏற்ப நைவேத்தியம் செய்யப்படுகின்றது. திருப்பதி ஏழுமலையான் எவ்வளவு பெரிய கோடீசுவரர்.

அப்படிப்பட்டவர்கள் அரசர்கள் செய்து அளித்த விதம் விதமான நிவேதனங்களில் மனம் மயங்காமல் பீமன் எனும் ஏழைக்குயவன் களி மண்ணில் செய்த பூக்களில் மனதைப் பறி கொடுத்து பீமன் கொடுத்ததை ஏற்றுக் கொண்டான். அதனால் தான் இன்றும் பீமனை கௌரவிக்கும் வகையில் திருப்பதி ஏழுமலையானுக்கு மண் சட்டியில் தான் நைவேத்தியம் படைக்கப்படுகின்றது.

சனிக்கிழமை தோறும் பெருமாளுக்கு வீட்டிலேயே நைவேத்தியம் படைத்து வழிபட்டால் செல்வம் பெருகும் என்கிறார்கள். அமாவாசை அன்று பெருமாளுக்கு தயிர் சாதம், நைவேத்தியம் படைத்தால் தானம் செய்ததற்குரிய பலன்கள் கிடைக்கும். ராமநவமி தினத்தன்று நீர்மோர், பானகம், கோசமல்லி மூன்றும் நைவேத்தியம் செய்வது மிகவும் நல்லது.

அழகர் மலையில் கள்ளழருக்கு 1 படி அரிசி, 1/2 படி உழுந்து, 1/2 படி நெய் கலந்து ஐம்பொன்னாலான வாணலியில் தயாரிக்கப்படும் தோசையை நைவேத்தியம் செய்கிறார்கள். அது போல கும்பகோணம் சாரங்கபாணி கோவி லில் கொள்ளு, மொச்சை, பாசிப் பருப்பு, உழுந்து, துவரை ஆகிய 5 பருப்புகளை கலந்து தயார் செய்யப் படும் கும்மாயம் என்ற நைவேத்தியம் வித்தியாசமானது.

சில பெருமாள் தலங்களில் எமலோக தல விருட்சமான பிரண்டையை கலந்து நைவேத்தியம் தயாரிப்பார்கள். துவாரகையில் கண்ணனுக்கு தினமும் 17 தடவை நைவேத்தியம் படைக்கிறார்கள். லட்டு, ஜிலேபி, சக்கரை பொங்கல், தயிர் போன்றவைகளை நிவேதனம் செய்து இறுதியில் ஜீரணத்துக்காக லேகியமும் படைக்கிறார்கள்.

கிராமங்களில் சிறு தெய்வ வழிபாடுகளின் போது மது மாமிசத்தை நைவேத்தியமாக படைக்கிறார்கள். சங்க காலத்தில் இருந்தே அசைவ உணவுகளை இறைவனுக்கு படைக்கப்படும் பழக்கம் உள்ளதால் அது இன்றும் தொடர்கிறது.

சில தலங்களில் பருவ காலத்துக்கு ஏற்ப சீசனுக்குத் தகுந்த மாதிரி நைவேத்தியம் படைப்பார்கள். ஆடி மாதம் மாரி அம்மன் கோவில்களில் வழங்கப்படும் கூழ், மருந்துக் கஞ்சி ஆகியவை இந்த ரக நிவேதனங்கள் ஆகும். இப்படி ரகம் ரகமாக நைவேத்தியங்கள் படைக்கப்பட்டாலும் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, கற்பூரம் ஆகியவை நைவேத்தியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அது ஏன் என்பதை அடுத்து காணலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## மதுபானம் அருந்திய இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மீரிகம- கீனதெனிய பகுதியில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட ஸ்பிரித் அடங்கிய ஒருவகை மதுபானத்தை அருந்திய இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒருவர், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளதாவது, "நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு, நால்வர் கொண்ட குழுவொன்று மதுபானம் அருந்தியமை தொடர்பாக எமக்கு தகவல் கிடைத்தது.

இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த இருவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த 54 மற்றும் 47 வயதான சகோதரர்களாவர். இவர்கள் தாயின் மரணச்சடங்கின் பின்னர் மதுபானம் அருந்தியுள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஐ)

## 210 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொவிட்-19 பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாது சிக்கித் தவித்த மேலும் 210 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தனர். அதன்படி கனடாவிலிருந்து 130 பேரும் கட்டாரிலிருந்து 80 பேரும் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்துப் பயணிகளும் தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களினால் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ)

## 55 பேர் கைது

(கொழும்பு)

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 55 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கமைய கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் குறித்த குற்றச்சாட்டுகளுக்கமைய 1445 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 350 | 320 | 350 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 120 |
| புடோல் | 150 | 140 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300-400 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 500 | 400 | 320 |
| லீக்ஸ் | 150 | 100 | 120 |
| பீற்றூட் | 120 | 160 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 400 |
| போஞ்சி | 280 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 200 | 220 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 280 | -- | 300 |
| வெங்காயப்பூ | 400 | — | — |
| முள்ளங்கி | 80 | 140 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 160 |



# சிறுவர் அரங்கம்

## மகத்துவம் வாய்ந்த துறவி



முல்லா வசித்து வந்த ஊரில் ஒரு நாத்திகன் வசித்து வந்தார்.

அவன் தெய்வ நம்பிக்கை உடையவர்களைப் பார்த்துவிட்டால் போதும் உடனே கிண்டலும் கேலியும் செய்வான்.

ஒரு நாள் சந்தை திடலில் அந்த நாத்திகன் முல்லாவைப் பார்த்து விட்டான். அவரை அவமானப்படுத்த எண்ணினான்.

முல்லா அருகே வந்ததும், "முல்லா அவர்களே! உலகத்தில் நீங்கள் தான் முற்றும் துறந்த துறவி என்று மக்கள் பேசிக் கொள்கிறார்களே? அப்படி நீர் எதை துறந்து ஞானி ஆனீர்" என்று நாத்திகன் கேலியாக கேட்டார்.

"எந்த முட்டாள் அப்படி சொன்னது...என்னை விட மிகவும் மகத்துவம் வாய்ந்த ஒரு துறவி இருக்கிறாரே!" என்றார் முல்லா.

நாத்திகனுக்கு மட்டும் அல்ல அங்கு நடமாடிக் கொண்டிருந்த மக்களுக்கும் இந்த தகவல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

முல்லாவை விட மேலான துறவி இந்த ஊரில் யார் இருக்க முடியும் என்று அவர்களுக்கு விளங்கவில்லை.

நாத்திகனும் இந்த பதில் கேட்டு வியப்படைந்து "முல்லா இந்த ஊரில் உள்ள அந்த மகத்துவம் வாய்ந்த துறவி யார்?" என கேட்டார்.

"அந்த துறவி நீர் தான்" என்று முல்லா கூறியதை கேட்டு அதிர்ச்சியடைந்து விட்டார். "நானா அந்த துறவி. அது அப்படி?" என்று கேட்டார்.

"என்னை போன்ற சாதாரண துறவிகள் கேவலம் உலகத்தில் இருக்கும் பொருட்களைத்தான் துறப்பது வழக்கம். நீரோ கடவுளையே துறந்து விட்ட துறவி ஆயிற்றே. உம்மை மிஞ்சக்கூடிய துறவி உலகத்தில் ஏது?" என்று முல்லா பதிலளித்தார்.

அங்கே சூழ்ந்திருந்த மக்கள் நாத்திகனைப் பார்த்து ஏளனமாக சிரித்தனர்.

நாத்திகன் தலை குனிந்தவாறு அந்த இடத்தை விட்டு அகன்று விட்டார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

56

அலெக்சாண்டரின் நடை வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் நண்பர்கள் ஓட்டமும் நடையுமாகச் சென்றனர்.

யுத்தத்திற்குப் புறப்படுவதற்கு முன் டெல்பி ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது மாசிடோனியர்களின் வழக்கம். யுத்தம் என்று இல்லை.

எந்தவொரு விடயத்தைத் தொடங்குவதற்கு முன்னாலும் தெய்வங்களுக்கு வழிபாடு நடத்துவது, பூஜை செய்வது, அபிஷேகம் நடத்துவது எல்லாம் கிரேக்கர்களின் பழக்கம்.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு நகரத்திற்கும் தெய்வங்கள், ஆலயங்கள் இருக்கின்றன.

எல்லாவற்றையும் விட டெல்பி ஆலயத்துக்கு அதிக சக்தி இருப்பதாக நம்பப்பட்டது.



டயாக்னிஸ்

அலெக்சாண்டர் தன்னுடைய அமைச்சர்கள், தளபதிகள், நண்பர்கள் புடைசூழ டெல்பி ஆலயத்திற்கு சென்றார். நுழைவதற்கு முன்னர் வெளியே வைக்கப்பட்டிருந்த தொட்டியில் இருந்த நீரை எடுத்து கை, கால்களைக் கழுவினார். தன் கரங்களாலேயே விளக்கேற்றி வைத்துக் கண் மூடிப் பிரார்த்தனை செய்தார்.

அந்த ஆலயத்தில் குறி சொல்லும் பழக்கம் இருந்தது. எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்பதைக் கணித்துச் சொல்பவர்கள் நிறைய பேர் ஆலய வாசலில் இருப்பார்கள்.

அவர்கள் சொன்னால் பலிக்கும் என்பது சிலருடைய நம்பிக்கை. அவர்கள் சொன்னால் மட்டுமே பலிக்கும் என்பது வேறு சிலருடைய நம்பிக்கை.

நிறையப் பேர் குறி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களை நோட்டமிட்டபடியே புறப்பட்டார் அலெக்சாண்டர்.

அடுத்ததாக அப்போலோ தெய்வம். கிரேக்கர்கள் மதிக்கும் தெய்வங்களுள் முக்கியமானது. மாசிடோனியர்கள், தெஸ்ஸாலியர்கள் போன்ற எல்லா வேறுபாடுகளையும் சட்டையைப் போல கழற்றி வைத்துவிட்டு, ஒன்றாகச் சென்று வணங்கக் கூடிய தெய்வம். வெற்றியை வாரி வழங்கும் தெய்வம்.

வழிபாடுகள் முடிந்தன. பூஜை முடிந்தது. படைகளைத் தயார் செய்வது மட்டும் தான் பாக்கி.

மேன்மை பொருந்திய வீரர்களே, மிகப் பெரிய போருக்குத் தயாராகிறோம். அதற்கு முன்னர் உங்களுடைய குடும்பச் சூழல் பற்றித் தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கின்றேன். அலெக்சாண்டர் சட்டென்று பேச்சை நிறுத்தினார்.

(தொடரும்)

இறைவன் எங்கோ வெகு தொலைவில் இருக்கிறார். ஆனால், பிரார்த்தனையோ அவரை பூமிக்கு இழுத்துக் கொண்டு வருவதுடன், அவருடைய சக்தியையும் நம்முடைய முயற்சியையும் இணைக்கிறது. –மாட்டீகாஸ் பெரீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாரொடு நோகேன் யார்க்கெடுத்து உரைக்கேன்

இன்று மார்கழி மாதப் பிறப்பு.

மார்கழி மாதம் குளிர் நிறைந்த காலம். இக்காலத்தில் தொற்று நோய்கள் பரவுகின்ற வாய்ப்புகள் இருப்பதனால் மார்கழி மாதத்தை பீடை காலம் என நம் முன்னோர்கள் முணுமுணுத்துக் கொள்வர்.

மழை, வெள்ளம், புயல் காரணமாக குடல் சார்ந்த தொற்று நோய்கள் பரவலாக ஏற்படுவதன் அடிப்படையில் மார்கழி மாதத் தில் தூய்மையைப் பேணுவதற்காக விசேட நடைமுறைகளை நம் முன்னோர்கள் வகுத்துக் கொண்டனர்.

மார்கழி மாதம் பிறந்ததும் சுற்றுச் சூழலை சுத்தம் செய்வதும் தனிநபர்கள் ஸ்நானம் செய்து வீட்டு வாசலில் கோலமிட்டு புனிதத்தைப் பேணுவதும் வழமையாக்கப்பட்டது.

கூடவே மாணிக்கவாசகர் சுவாமிகள் பாடியருளிய திருவாசகத்தை மார்கழி மாதம் முழுவதும் படிக்கின்ற வழமையும் நம்மிடத்தேயுண்டு.

இதற்கு மேலாக, மார்கழி மாதத்தில் திருப்பள்ளியெழுச்சி பாடி வைகறையில் துயில் எழுப்பி திருவெம்பாவைத் தரிசனம் காணுகின்ற நடைமுறையும் உண்டு.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசம் தேனினும் இனியது.

சிவனை – இறைவனை இரந்து இரந்து அழுது, மானிடப் பிறப்பின் பேற்றைத் தந்தருளுமாறு வேண்டுவது.

இறைவனைப் பார்த்து

... ஆண்ட நீ அருளில்லையானால்...

யாம் எங்ஙனம் உய்தி பெற முடியும் என மாணிக்கவாசகர் தான் வணங்கும் நடராஜப் பெருமானைப் பார்த்துக் கேட்கின்றார்.

ஆம், சிவனின் – இறைவனின் அருள் ஒன்றுதான் இந்த உலகை வாழ வைக்கும். அவன் அருளில்லையானால், இந்த வையகம் வாழ்வதற்கு உகந்ததல்ல என்றாகிவிடும்.

இப்போதெல்லாம் கொரோனா எனும் கொடிய தொற்று நோயால் உலகம் அவஸ்தைப்படுகிறது.

ஏழு கோடி பேருக்கு கொரோனாத் தொற்று. 16 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இறந்து போயினர்.

இருந்தும் இன்னமும் கொரோனா கட்டுக்கடங்கவில்லை எனின், இறைவனிடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறுவழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஆம், ... தளர்ந்தேன் எம்பிரான் எனைத் தாங்கிக் கொள்ளே என்று மணிவாசகர் பாடியது தனக்கன்று. அது நமக்கானது.

ஆகையால் மார்கழி மாதம் பிறந்திருக்கும் இவ்வேளையில் – கொரோனாத் தொற்று நம் வீட்டு வாசலைத் தட்டுகின்ற இந்நேரத்தில் யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன் ஆண்ட நீ அருளிலையானால்...

என்று அவனிடம் வேண்டுவோம். அது வொன்றே நம்மைக் காத்தருள வல்லதாம்.

# சிறைச்சாலைகளிலுள்ள நெருக்கடிக்கு பொலிஸ் திணைக்களமே பொறுப்பு

## சட்டமா அதிபர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு சட்டமா அதிபர் திணைக்களம் பொறுப்பில்லை. எமது ஆலோசனையின் பிரகாரம் செயற்பட தவறிய பொலிஸ் திணைக்களமே அதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகளில் இருக்கவேண்டிய சிறைக் கைதிகளின் எண்ணிக்கைக்கும் மேலாக அதிக கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவே சிறைச்சாலையில் கொரோனா தொற்று நிலைமை பாரியளவில் பரவவும் காரணமாகும் என தெரிவித்து, சிலர் எம்மை குற்றம் சாட்டினாலும் அதன் நிலைமைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் பொறுப்பில்லை.

மாறாக எனது ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாமல்போன பொலிஸ் திணைக்களமே அதற்கு பொறுப்பு கூறவேண்டும்.

சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்காக, போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட சாதாரண குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை பிணையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல சந்தர்ப்பங்களில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியிருந்தேன்.

நாட்டுக்குள் கொரோனா தொற்று பரவி இருந்த கடந்த ஏப்ரல் மாதம் மற்றும் கொரோனா இரண்டாம் அலை ஆரம்பமான பின்னரும் வழங்கியிருந்த ஆலோசனைகளை இதுவரை செயற்படுத்தவில்லை.

கொரோனா தொற்று நாட்டுக்குள் பரவிக் கொண்டிருக்கும் நிலையிலும் தமது உயிருக்கு ஏற்படும் ஆபத்தையும் கண்டு கொள்ளாது, கடமைகளை மேற்கொண்டு, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கவும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவும் எமது அதிகாரிகள் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் பொலிஸ் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களின் பலவீனம் காரணமாக எமது அதிகாரிகளின் முயற்சி பயனற்று போகின்றது.

பொது மக்களின் பணத்தில் சம்பளம் பெற்று தனது குடும்பத்தை நடத்திச்செல்லும் அனைத்து அரச ஊழியர்களதும் பிரதான கடமையாக இருக்க வேண்டியது, எந்தவகையான தடைகள், நெருக்கடிகள் குறைபாடுகள் ஏற்பட்டாலும் பொது மக்களுக்காக உண்மையாக சேவை செய்வதாகும் என்றார். (ம-3)

# மின்சாரத்தை விரைவாகப் பெறும் வழிமுறைகளை ஆராயுங்கள்

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

காற்று, சூரிய சக்தி மற்றும் இயற்கை வாயு ஆகிய வளங்களின் ஊடாக மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கான விரைவான வழிமுறைகளை ஆராயுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இந்த உத்தரவை விடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் 2030ஆம் ஆண்டாகும் போது இலங்கைக்குத் தேவையான மின்சாரத்தில் 70 சதவீதமானது மீளுருவாக்கக்கூடிய சக்தி வளங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது தனியார் துறையினருக்கு ஏற்படுகின்ற தடைகளை இல்லாது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி அறிவுறுத்தி இருப்பதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### துன்பத்தைப் பொறுத்துக் கொள்வோம்

❖ நிஜமான புகழ் எது தெரியுமா? பொருள் இல்லாத ஏழைகளைக் கண்டு இரக்கப்பட்டு செய்யும் உதவிகளின் மூலம் உண்டாகும் புகழ் மட்டுமே என்றும் நிலைத்து நிற்கும் சிறப்பு கொண்டதாகும்.

❖ செல்வம் இல்லாதவர்கள் இம்மண்ணுலகில் எதையும் பெற முடியாது. அருள் எனப்படும் செல்வம் இல்லாதவர்களால் மேலுலகத்தில் இன்பம் பெற முடியாது.

❖ தீயில் காய்ச்சி உருக்கிய தங்கம் எப்படி ஒளி விட்டுப் பிரகாசிக்கிறதோ அதுபோல, துன்பங்கள் நம்மை வருத்தும் போது அதைப் பொறுத்துக் கொள்பவர்கள் யாரோ அவர்களின் வாழ்வில் எல்லா நன்மைகளும் ஏற்படும்.

❖ தன்னைப் பெற்று ஆளாக்கிய தாயின் பசியைப் போக்குவதாக இருந்தாலும் கூட, ஒருவன் கொடிய செயல்களாகிய கொலை, களவு போன்றவைகளைச் செய்வது கூடாது.

❖ கண்ணிற்கு அழகு சேர்ப்பது தாட்சண்யம் என்னும் கருணையுள்ள அருட்பார்வை மட்டுமே. அப்படியில்லாமல், பிறரது துன்பத்தைக் கண்டு கொள்ளாமல் செல்பவனின் கண்கள் இரண்டும் முகத்தில் இருக்கும் புண்கள் போன்றதாகும்.

### மகர சிறைச்சாலை மீது தாக்குதல்

# எதிர்க்கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மகர சிறைச்சாலை மீதான தாக்குதலுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் ஆர்வலர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் கடவத்த நகர மத்தியில் நேற்று நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கலந்து கொண்டார்.

கைதிகள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்ததாகவும், கைதிகள் மீதான தாக்குதலை கடுமையாக கண்டனம் செய்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சரத் பொன்சேகா, திஸ்ஸ அதநாயக்க, ராஜித சேனரத்ன, கயந்த கருணாதிலக, தலதா அத்துகோரல, எரான் விக்ரமரத்ன, ஹர்ஷன ராஜகருணா, அசோக் அபேசிங்க, காவிந்த ஜெயவர்தன, ஜே.சி.அலவதுவல, துஷார இந்துனில், சுஜித் சஞ்ய பெரேரா, ஹெக்டர் அப்புஹாமி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், சிவில் சமூகத்தின் பலரும் பங்கேற்றிருந்தனர். (ம-3)

# லங்கா பிரீமியர் லீக்

# இறுதிப்போட்டி இன்று ஆரம்பம்

## யாழ். காலி அணிகள் பலப்பரீட்சை



**லங்கா பிரீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் தம்புள்ளை வைக்கிங்ஸ் அணியை வீழ்த்தி யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்து காலி அணியுடன் இன்று மோதவுள்ளது.**

லங்கா பிரீமியர் லீக் இருபது -20 கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி தம்புள்ளை வைக்கிங்ஸ் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணிகளுக்கிடையே ஆரம்பமானது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் அணியானது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களை குவித்தது. அணி சார்பில் ஜோன்சன் சார்ல்ஸ் 56 பந்துகளில் ஒரு சிக்ஸர், 10 பவுண்டரிகள் அடங்கலாக 76 ஓட்டங்களையும், அவிஷ்க பெர்னாண்டோ 39 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

பந்து வீச்சில் தம்புள்ளை அணி சார்பில் மெலிந்த புஷ்பகுமார 2 விக்கெட்டுகளையும் லஹுரு குமார, ரமேஸ் மெண்டிஸ் மற்றும் அன்வர் அலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

166 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை அணியானது யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணியின் பந்து வீச்சுக்களில் திக்குமுக்காடி 19.1 ஓவரை மாத்திரம் எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 37 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

தம்புள்ளை அணி சார்பில் உபுல் தரங்க 33 ஓட்டங்களையும், நிரோஷன் திக்வெல்ல 29 ஓட்டங்களையும், ரமேஸ் மெண்டிஸ் 26 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

யாழ்ப்பாணம் அணி சார்பில் பந்து வீச்சில் வர்னிந்து ஹசரங்க மொத்தமாக 4 ஓவர்களுக்கு பந்துப் பரிமாற்றம் மேற்கொண்டு, 15 ஓட்டங்களை மாத்திரம் வழங்கி 3 விக்கெட்டுகளை பெற்றார்.


இதன்மூலம் தொடரில் ஹசரங்க மொத்தமாக 16 விக்கெட்டுகளை எடுத்து முன்னணியில் உள்ளார்.

அது தவிர தனஞ்சய டிசில்வா, சுரங்க லக்மால், சரித அசலங்க, டுவென் ஆலிவர் மற்றும் சதுரங்க டிசில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்கு நுழைந்த யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணியானது, இறுதிப் போட்டியில் கிண்ணத்துக்காக காலி கிளாடியேட்டர்ஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

இறுதிப் போட்டியானது இன்று 16 ஆம் திகதி அம்பாந்தோட்டை, சூரியவெவ மைதானத்தில் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (4)

# பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட்; கொலின் டி கிராண்ட் ஹோம் விலகல்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இருந்து சகலதுறை வீரரான கொலின் டி கிராண்ட்ஹோம் விலகியுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

வலது பாதத்தில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இத்தொடரிலிருந்து அவர் விலகியுள்ளதாக தலைமை பயிற்சியாளர் கேரி ஸ்டீட் விளக்கம் அளித்துள்ளார். ஜனவரி நடுப்பகுதியில் அவர் குணமடைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோல அணித்தலைவரான கேன் வில்லியம்சன் இருபது-20 தொடருக்கான காத்திருப்பு பட்டியலில் உள்ளார். ஏனெனில் அவரது முதலாவது குழந்தை பிறக்கவுள்ளதால், அவர் இத்தொடரில் விளையாடுவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது. எனினும் அவர் இரண்டாவது இருபது-20 போட்டியில் அணியுடன் இணைவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர சுழற்பந்து வீச்சாளரான அஜாஸ் படேல் காயத்திலிருந்து மீண்டுள்ள நிலையில், தனது உடற் தகுதியை நிரூபிக்க நியூசிலாந்து 'ஏ' அணியுடன் இணைவார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் மற்றும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக நியூசிலாந்து சென்றுள்ளது. (4)

# லா லிகா கால்பந்து தொடர்

## பார்சிலோனா அணி வெற்றி

லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெலண்டே அணியை தோற்கடித்தது.

20 அணிகள் இடையிலான லா லிகா கால்பந்து போட்டி தொடர் ஸ்பெயினில் நடைபெறுகிறது. இதில் லயோனல் மெஸ்சி தலைமையிலான பார்சிலோனா கிளப் அணி, லெவாண்டே அணியை எதிர்கொண்டது.

பந்து அதிக நேரம் பார்சிலோனா அணியினரின் கட்டுப்பாட்டில் வலம் வந்தாலும் எதிரணியின் தடுப்பு அரணை தகர்த்து கோல் அடிக்க முடியாமல் தடுமாறினார்கள். இதனால் இந்த ஆட்டம் டிராவில் முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 76 ஆவது நிமிடத்தில் பார்சிலோனா



அணியின் பிரெங்கி டி ஜோங் கடத்தி கொடுத்த பந்தை கப்டன் மெஸ்சி கோல் வளையத்துக்குள் திணித்தார். அதன் பிறகு இரு அணியினரும் கோல் அடிக்க எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை.

முடிவில் பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் லெவாண்டே அணியை தோற்கடித்தது. 11 ஆவது ஆட்டத்தில் ஆடிய பார்சிலோனா அணி 5 வெற்றி, 2 டிரா, 4 தோல்வியுடன் 17 புள்ளிகள் பெற்று 8 ஆவது இடத்தில் உள்ளது. ரியல் சோசிடாட் அணி 26 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (4)

# கப்டன் பதவியால் ரகானே தடுமாறமாட்டார்-கவாஸ்கர்

விராட் ஹோலி இல்லாததால் கடைசி மூன்று போட்டிகளில் கப்டன் பதவியை ஏற்க இருக்கும் ரகானேவுக்கு நெருக்கடி இருக்காது என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா - இந்தியா இடையில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடக்க இருக்கிறது. முதல் டெஸ்ட் போட்டியில் மட்டும் விராட் ஹோலி விளையாடுகிறார். மற்ற மூன்று போட்டிகளில் ரகானே தான் கப்டனாக செயற்படவுள்ளார்.

கப்டன் பதவி நெருக்கடியால் ரகானே தடுமாற வாய்ப்புள்ளதாக கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகின்றனர். ஆனால் ஏற்கனவே கப்டன் பதவியில் வெற்றியை பெற்ற ரகானேவுக்கு நெருக்கடி இல்லை என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கவாஸ்கர் கூறுகையில், "கப்டன் பதவியால் ரகானேவுக்கு உண்மையிலேயே நெருக்கடி இல்லை. ஏனென்றால் இரண்டு முறை, அதாவது இரண்டு போட்டிகளில் அணியை வழிநடத்தி வெற்றி கண்டுள்ளார்.

ஒருமுறை அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தரம்சாலாவிலும், ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளார்.

அதனால் கப்டன் பதவியை பொறுத்தவரைக்கும் அவருக்கு நெருக்கடி இல்லை. ஏனென்றால், மூன்று போட்டியிலும் பொறுப்பு கப்டன்தான் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால் கப்டன் பதவியை என்ற சிந்தனை சுமந்து செல்வார், என நான் பார்க்கவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (4)

## புளியங்குளம்...

வதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

புளியங்குளம் இந்துக் கல்லூரி மாணவர்களுடன் தொடர்புடையோருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கோரப்பட்டதற்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (ம-3)

## யாழ்ப்பாணம்...

வாகி வரும் கொரோனா உபகொத்தணி விரைவாக பரவி வரும் நிலையில், அதனுடன் தொடர்புடையவர்கள் தனிமைப் படுத்தப்பட்டு வருகிறார்கள்.

கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர் ஒருவர் அளவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்றுள்ளார்.

இதையடுத்து, வைத்தியசாலை 3 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. நோயாளிக்கு சிகிச்சையளித்த வைத்தியர், பொறுப்பு வைத்தியர் மற்றும் தொடர்புடைய அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## சுகாதார அமைச்...

வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்..

சுகாதார அமைச்சின் சாரதிகளில் ஒருவருடைய நண்பருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

## மருதனார்மடம்...

பொருட்கள் வாங்குவதற்கு சென்றவர்கள் தங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருடன் தொடர்பு கொண்டு தம்முடைய தகவல்களை தெரிவிக்குமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு கிழமை களுக்குள் மருதனார்மடம் பொதுச் சந்தை க்கு பொருட்கள் வாங்குவதற்கு சென்றவர் கள் தங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருடன் (சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்) அல்லது கிராம சேவை உத்தியோகத்தரிடம் தொடர்பு கொண்டு தம்முடைய தகவல்களை தெரிவிப்பதுடன், சமூகத் தொற்றை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனையும் செய்து கொள்ள முடியும்.

அவ்வாறு தகவல் வழங்குவதில் ஏதும் சிரமங்கள் இருப்பின் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர அழைப் பெண்ணான 021 222 6666 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் சந்தேகங்களுக்குரிய விபரங்களை தெரியப்படுத்துவீர்களாயின் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் சமூகத்தையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## கீரிமலை மடம்...

வரை முடக்கப்பட்டுள்ளது.

யாழ். மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புபட்டு நேற்று முன்தினம் தொற்றுறுதியான ஏழாலையைச் சேர்ந்த நபர் அண்மையில் நீத்தார் கடன் நிறைவேற்ற கீரிமலை சென்று திரும்பியமை தெரியவந்துள்ளது.

இத்தகவலின் அடிப்படையில் கீரிமலை தர்ப்பண மடம் உள்ள பகுதி முடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த தினத்தில் கிரியை நிகழ்வை நடத்திய மானிப்பாயைச் சேர்ந்த அந்தணரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நல்லூர் பிரதேச...

யின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாக நேற்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பிரதேச சபைத் தவிசாளர் பதவி இழக்கிறார்.

20 உறுப்பினர்களை கொண்ட நல்லூர் பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற பட்ஜெட் வாக்கெடுப்பில் 12 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 8 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர்.

அதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 4 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. (ம-3,18)

## கட்சித் தலைவர்...

ரம்புக்வெல,

மாகாண சபை தேர்தலை துரிதப் படுத்துவதற்கான பரிந்துரை மற்றும் கருத்துக்களை கேட்டறிவதற்காக கட்சி தலைவர்களின் கூட்டத்தை கூட்டுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தலை துரிதப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட விடயதான அமைச்சர் ஜனக பண்டார தென்ன கோனால் அமைச் சரவைக்கு சமர்ப் பிக் கப்பட்ட ஆவணத்திற்கு அமை வாக இந்த பரிந்துரை சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கட்சித் தலைவர் களின் கருத்துக்களை கேட்டறிந்து இந்த நிலைப்பாடு குறித்து அமைச் சரவை கவ னம் செலுத்தும் என்று அமைச்சரவை தீர் மானங் களை அறிவிக்கும் செய்தி யாளர் சந் திப்பில் அமைச் சரவை பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். (ம-3)

## 19 பேருக்கு...

அநுராதபுரம் போதனா வைத்திய சாலை, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகளில் யாழ். மாவட்டத்தில் 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

உடுவிலில் 6 பேருக்கும் தெல்லிப்பழையில் 9 பேருக்கும் நல்லூரில் 2 பேருக்கும் சண்டிலிப்பாயில் 2 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளன.

மேற்படி தரவுகளின் பிரகாரம் யாழில் ஒரேநாளில் 19 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## பாடசாலை...

வித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 03ஆம் திகதி வரை இந்த விடுமுறை நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## உடு...

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் நேற்று முன்தினம் 424 பேருக்கு பிசிஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேருக்கு தொற்று உறுதியானது.

இவர்கள் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த சந்தை வியாபாரிகள். மருதனார்மட சந்தை வியாபாரிகளுடன் தொடர்புடைய 58 பேர் தற்போது தொற்றிற்குள்ளாகியுள்ளனர்.

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் பகுதிகளில் சமூகத்தொற்று ஏற்பட்டுள்ளதா? என்பதை அறிவதற்கான பிசிஆர் சோதனைகளை ஆரம்பித்துள்ளோம்.

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அடையாளம் காணப்பட்ட முதலாவது தொற்றாளியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 58 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள். இவர்கள் உடுவில் பிரதேச செயலகப் பகுதியில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## +622 பேருக்கு...

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 34 ஆயிரத்தைக் கடந்து 34 ஆயிரத்து நூறாக அதிகரித்துள்ளது. (ம-3)

## தமிழ் அரசியல்...

மான உதய கம்மன்பில தெரிவித்தார்.

தமிழர் என்பதற்காக எந்தவொரு நபரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 1994ஆம் ஆண்டு முதல் தமிழ் கைதிகள், கைது செய்யப்பட்டதாகவும், இந்த விடயம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் பிரதமரிடம் முன்வைத்த கோரிக்கை குறித்தும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இவர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கத்தின் திட்டம் எதுவும் உள்ளதா எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்தபோதே உதய கம்மன்பில இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


மெகா பவர்
திகதி 15/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0704
S 03 01 16 31 58

மஹஜன சம்பத
திகதி 2020/12/15
சீட்டிழுப்பு இலக்கம் 4337
D 2 1 4 7 3 9

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 15.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2632
E 03 33 59 76

தன நிதானய
திகதி - 2020.12.15
சீட்டிழுப்பு இலக்கம் - 374
D 03 30 46 74

சுபிரி வாசனா
2020/12/15
1557
14
01 03 43 48

அத கோடிபதி
கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 1133
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 15.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 90,944,615
வெற்றி இலக்கங்கள்
05 34 49 69 O

சனிதா
கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 3463
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 15.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,132,487
வெற்றி இலக்கங்கள்
07 17 52 66 Q

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,365,126/=
திகதி: 15.12.2020
வெற்றி வாரம்: 3014
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
07 17 31 46
மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,394,140

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1307
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 15/12/2020
தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
L 07 51 59 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் 58,174,802

X 34 41 55 59
664
15.12 2020
செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,956,850
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# கார் - ஹயஸ் விபத்து ஐந்து பேர் காயம்

## அறுகுவெளிப் பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-அறுகுவெளி ஏ-32 வீதியில் காருடன்-ஹயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த ஐவர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து சென்ற ஹயஸ் வாகனம் வீதியில் குறுக்கே நின்ற மாட்டினை விலத்திச் செல்ல முற்பட்ட போது எதிர் திசையில் பூநகரி பகுதியில் இருந்து வந்த காருடன் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ம-03,30)

# மாகாண சபை முறைமை நாட்டிற்கு மிக முக்கியம்

## அமைச்சர் ரோஹித சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியம். நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் என துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபை தேர்தல் மற்றும் மாகாண சபை முறைமை இரத்து செய்தல் என அரசியல் மட்டத்தில் பேசப்படுகிறது.

பல்வேறு நோக்கங்களை அடிப்படையாக கொண்டு மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. கடந்த அரசாங்கத்தில் அரசியல் நோக்கங்களுக்காக மாகாண சபை முறைமை பலவீனப்படுத்தப்பட்டது.

மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியம். மாகாண சபை தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றிப் பெற்று மாகாண சபை முறைமையை பலப்படுத்தும் என்றார்.

(ம-03)

# சித்திரவதை தொடர்பான சட்டத்தில் திருத்தம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைகள் மற்றும் ஏனைய அவமானங்களுடன் கூடிய கவனிப்புக்கள் இல்லாவிட்டால் தண்டனைகளுக்கு ஆளாக்குவதற்கு எதிரான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப்பணம் சமகாலத்திற்கு பொருத்தமான வகையில் திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சித்திரவதைகள் மற்றும் ஏனைய அவமானங்களுடன் கூடிய கவனிப்புக்கள் இல்லாவிட்டால் தண்டனைகளுக்கு ஆளாக்குதல் அரசியலமைப்புச் சட்டத்தின் 11 ஆவது அரசியலமைப்பின் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறான செயல்களை மேற்கொள்பவர்களுக்கு கண்டனம் தெரிவித்தலும், அதற்கு முடிந்தவரை தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும். அதனால், அதுதொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள 1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைகள் மற்றும் ஏனைய அவமானங்களுடன் கூடிய கவனிப்புக்கள் இல்லாவிட்டால் தண்டனைகளுக்கு ஆளாக்குவதற்கு எதிரான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப்பணம் சமகாலத்திற்கு ஏற்புடைய வகையில் திருத்தம் செய்வதற்கும், அதற்கான சட்ட மூலத்தை தயாரிக்க சட்ட வல்லுநர்களுக்கு ஆலோசனை வழங்கவும் நீதியமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(ம-03)

## யாழில் இடம்பெற்ற வாள்வெட்டு

# வன்முறைகளுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஓமந்தையில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களை நடத்திவிட்டு தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் ஒருவர் ஓமந்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறை, நீர்வேலியில் வீடு புகுந்து இளைஞனையும் தாயாரையும் தாக்கியமை, கச்சேரியில் ஊழியர் ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியமை உள்ளிட்ட பல வாள்வெட்டு வன்முறைகளுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரால் யாழ்ப்பாணத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் சந்தேக நபர் தேடப்பட்டு வந்த நிலையில் ஓமந்தையில் தலைமறைவாகியிருந்தமை தொலைபேசி உரையாடலின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்று காலை கைது செய்யப்பட்ட சந்தேக நபர், தற்போது யாழ்ப்பாணத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றார் எனவும் அவரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-03,101)

## கைதாகிய இந்திய மீனவர்களை

# படகில் தனிமைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் அவர்களின் படகுகளிலேயே தடுத்துவைக்கப்பட்டு கண்காணிப்பதற்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 22 பேர் 03 படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் ஜூட்சனின் வாசஸ்தலத்தில் திணைக்கள அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது தொடர்பான குறித்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

அதனை விசாரித்த நீதிபதி, தற்போது மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள காரைநகர் கடற்படைத் தளத்திலே அவர்களது படகிலேயே எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் தடுத்துவைத்து கண்காணிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(ம-03)

## பண்டிகைக் காலங்களில்

# பொறுப்புடன் செயற்படாவிட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும்

## சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் பொறுப்புடன் செயற்படத் தவறினால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கோவிட் இரண்டாம் அலை கொழும்பு மாநகரசபையை தாண்டி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வியாபிக்கும் ஓர் நிலைமையை அவதானிக்க முடிகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ம-03)

# உயர்நீதிமன்ற கட்டடத்தில் நேற்று பாரிய தீ விபத்து

புதுக்கடை உயர்நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று மாலை தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் உயர்நீதிமன்றத்தைச் சூழ பெரும் புகை மூட்டமாகக் காணப்பட்டது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, தீயணைப்புப் படையினர் 9 வாகனங்களுடன் கடும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

(ம-03)


**2021 இற்கான நாட்காட்டிகள் (கலண்டர்)**

வியாபார நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், அச்சகத்தினருக்கு தேவையான சாந்தி மாதாந்த தமிழ் பஞ்சாங்க கலண்டர்கள்; A2, A3 அளவுகளிலும் ஆங்கிலக் கலண்டர் 20" 30", Office கலண்டர் மற்றும் வர்ணமான படக் கலண்டர்கள், சகல விதமான அளவுகளில் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (4974)

**சிவ தயா அச்சகம்**

92 (150), நாவலர் றோட், (N.S.B வங்கி அருகில்), மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

077 641 3568, 077 396 5214, 021 221 9483

**இந்திய சாஸ்திரியார் வருகை**

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (4944)

முன்பதிவுக்கு: 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் ›› 1150/=
லண்டன் → 1050/= இத்தாலி → 1250/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-909)
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | மல்லாவி துணுக்காய்

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-899)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.